சென்னையை புரட்டிப் போட்டது வெள்ளம். எங்கும் தண்ணீர் எதிலும் தண்ணீர். இந்த வெள்ளம் பல பணக்காரர்களை கையேந்தும் ஏழைகளாக்கியது. பல ஏழைகளை உதவிகள் செய்ததன் மூலம் பணக்காரர்களாக்கியது.

எதிர்கால தேவைக்கு சேர்த்து வைத்த பொருட்களில் இருந்து அன்றாட தேவைக்கு வைத்திருந்த அரிசி முதல் அனைத்தும் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட நிலை. தன்னை தண்ணீர் தீண்டாது என உயரமான கட்டிடங்களில் இருமாப்புடன் இருந்தவர் களை எல்லாம் இந்த வெள்ளம் தரைக்கு கொண்டு வந்தது. மேலும் சென்னைக்கு வெள்ள ஆபத்து என்பது உண்மையில் என்ன என்பதை இந்த வெள்ளம் உணர்த்தி காட்டியது.

இதற்கு முன்னால் வெள்ள ஆபத்தை கற்பனையில் பேசிக்கொண்டிருந்தவர்களுக்கு இந்த வெள்ளம் ஒரு மாதிரி.

100 வருடங்களுக்கு பின் ஏற்பட்ட கடும் மழை என ஒரு புறம் பேச்சு. ஏரி உடைந்து தண்ணீர் உள்ளே புகுந்து விட்டது என பீதி. கடல் நீர் வெளிவந்து விடக்கூடும் எனப் புரளி. சென்னையின் நிலை அதோ கதி தான். இனி சென்னையில் இருக்காதீர்கள் என தகவல்கள். இன்னும் பல நாட்களுக்கு மழை நீடிக்கும். 200 சென்டிமீட்டருக்கும் மேலாக மழை பெய்யும் என ஏகப்பட்ட கணிப்புகளை காரணம் காட்டி புரளிகள் என சென்னை ஒரு வழியாகி விட்டது.

தங்கள் கண் முன்னே குடும்பத்தில் உள்ளவர் இறந்து கிடக்க, மீதமுள்ளவர்கள் மேல்தளத்தில் நின்று கொண்டு உயிருக்கு போராடிக் கொண்டு தகவல் தர, அவர்களை காப்பாற்ற வெளியில் இருந்தவர்கள் முயல என உணர்ச்சிகரமான சூழல்களை பல இடங்களில் காண முடிந்தது.

கர்ப்பிணி பெண்களின் கதறல் வயதானவர்களின் அலறல் என பல இடங்களில் பரிதவிப்பு,

தங்களின் உடமைகள் எல்லாம் தங்களின் கண்முன்னே அடித்து செல்லப்படுவதை கண்டும் அதனை தடுக்க இயலாத சோகம்.

மின்சாரம் கிடையாது, தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது, உணவு கிடையாது, ஊரெங்கும் வெள்ளக்காடாய் இருந்தும் குடிக்க தண்ணீர் கிடையாது, பயணிக்க இருந்த வாகனங்கள் பழுதாகி போனது, பெட்ரோல் கிடைக்காமல் போனது, ஏ.டி.எம் வேலை செய்யவில்லை. திடீரென எல்லோரும் பிச்சைக்காரர்களாகி தங்கள் வீட்டிற்குள்ளேயே தரை தளம் தண்ணீர் சூழ்ந்த நிலையில் சிறை பிடிக்கப்பட்டார்கள் வெள்ளத்தால்.

இந்த நிலைக்கு யார் காரணம்? இதை தவிர்த்திருக்க முடியுமா? இதில் அரசு செய்த உதவிகள் என்னென்ன? தனியார் செய்த உதவிகள் என்னென்ன? அலசுகிறது இந்த கட்டுரை.

## வறட்சி

இந்த வடகிழக்கு பருவமழைக்கு முன்னர் பெய்ய வேண்டியது தென்மேற்கு பருவமழை. சென்ற ஆண்டு தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை இதோ அதோ என ஆட்டம் காட்டி ஏமாற்றி சென்றது. அதன் பின்னர் பெயய வேண்டிய வடகிழக்கு பருவமழையும் பொய்த்தது. விளைவு நவம்பர் மாதம் இந்த பேய் மழை பெய்வதற்கு முன் சென்னை வறண்டது.

இதன் காரணமாக சென்னைக்கு நீர் ஆதாரங்களான செம்பரம்பாக்கம், பூண்டி, புழல் ஏரிகள் வறண்டன. சென்னையில் நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்தது. இதன் காரணமாக தண்ணீருக்கு மக்கள் அலையும் காட்சியினை வெகுவாக சென்னையில் காண முடிந்தது. பல இடங்களில் நிலத்தடி நீருக்காக மீண்டும் ஆழம் கூட்டி 200 அடிக்கும் கீழாக குழாய்களை பதித்தும் தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டது. அப்போதே பல பன்னாட்டு வானிலை அறிக்கைகள் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை அதிகமாக பெய்யும் என கணித்தன.

## வடகிழக்கு பருவமழை

வடகிழக்கு பருவமழை அதற்குரிய காலமான அக்டோபர், நவம்பர், டிசம்பர் காலங்களில் தொடங்க வேண்டும். ஆனால் அக்டோபர் மாதத்தில் மழைக்கு பதிலாக கடுமையான வெயில் அடித்தது. கோடை கால வெயிலை போன்ற இந்த வெயில் தண்ணீர் தேவையை இன்னும் அதிகரித்தது.

இந்நிலையில் அக்டோபர் மாதத்தில் பருவமழை தொடங்கியது. ஆனால் சரியாக பெய்யவில்லை.

இந்நிலையில் நவம்பர் 9 அன்று வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு பகுதியில் காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவானது. இதன் காரணமாக நவம்பர் 12 அன்று ஒரே நாளில் 15 செ.மீ அளவிற்கு கனமழை பெய்தது. 13 நவம்பர் வரையில் பெய்த மழையானது அந்த மாதத்தில் பெய்ய வேண்டிய மழையின் அளவின் மூன்று மடங்காகும்.

எனவே, இந்த கடுமையான மழையில் சென்னையின் சில தாழ்வான பகுதிகளில் வழக்கம் போல் நீர் சூழ்ந்தது. ஆயினும் ஏற்கனவே சென்னை வறண்ட நிலையில் இருந்ததாலும் சென்னைக்கு நீர் வழங்கும் ஏரிகள் வறண்டிருந்ததாலும் இந்த மழையின் பாதிப்பு குறைந்த அளவே உணரப்பட்டது.

மழை நின்றவுடன் பல இடங்களில் இருந்த நீர் வேகமாக வடிய தொடங்கியது. பல நிவாரண முகாம்களில் இருந்த மக்கள் தங்கள் இல்லங்களுக்கு திரும்ப தொடங்கினர்.

சென்னை இயல்புக்கு திரும்பியது போல் தோன்றியது.

ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.

## மீண்டும் மழை

நான்கு நாட்கள் ஓய்ந்திருந்த மழை மீண்டும் துவங்கியது. மீண்டும் ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி அதே இடத்தில் நிலை கொண்டது. இதன் காரணமாக கனத்த மழை பெய்யும் என்ற வானிலை அறிக்கைகள் தெளிவாகவே வரத்தொடங்கின. ஏற்கனவே போதுமான தண்ணீரை உறிஞ்சி விட்டிருந்த நிலம் தற்போது மீண்டும் மழை நீரை உறிஞ்சும் நிலையில் இல்லை. எனவே ஆங்காங்கே நீர் தேங்க துவங்கியது. பழைய மழையில் நிறைந்து விட்டிருந்த நீர் நிலைகள் தற்போது அரசால் திறந்து விடப்பட துவங்கியது.

ஆனால் யாருக்கும் எந்த அவகாசமும் கொடுக்காமல் மழை தன் போக்கை தீவிரமாக்கிக் கொண்டே இருந்தது.

டிசம்பர் 1 அன்று மழை தன் உச்சகட்டத்தை எட்டியது. அன்றைய ஒரு தினத்தில் சென்னையில் 34 செ.மீ. மழையும் தாம்பரத்தில் 49.4 செ.மீ மழையும் பதிவாகியது. இப்படிப்பட்ட மழையை இதுவரை கையாண்டு அனுபவமற்ற பொதுப்பணித்துறை அதிகாரி களும் பொறியாளர்களும் திண்டாடினர். அவர்கள் நேரங்கடந்து எடுத்த முடிவுகளும் நேரத்தே எடுக்க தவறிய முடிவுகளும் இப்படிப்பட்ட பேரிடரை எவ்வாறு கையாள்வது என்ற அவர்களின் அறிவின்மையும் சென்னை நகர மக்களின் வாழ்வாதாரத்தை அழித்து போட்டது என்றால் மிகையாகாது. அதனை கீழ்கண்ட அட்டவணைகளின் மூலம் நிறுவ முடியும். முதல் அட்டவணை டிசம்பர் 1 அன்று பதிவான மழையின் அளவு டிசம்பர் 2 அன்று கணக்கிடப்பட்டு வெளியிடப்பட்டது.

**RAINIEST**

RAINFALL AT 8.30 AM ON DECEMBER 2

| RAIN GAUGE STATION | DISTRICT | RAINFALL (IN MM) |
|---|---|---|
| Tambaram | Kancheepuram | 494.20 |
| Chembarabakkam | Tiruvallur | 475.00 |
| Thirukazhukundram | Kancheepuram | 441.40 |
| Marakkanam | Villupuram | 421.00 |
| Chengalpattu | Kancheepuram | 392.40 |
| Ponneri | Tiruvallur | 391.00 |
| Sriperumbudur | Kancheepuram | 379.60 |
| Cheyyur | Kancheepuram | 375.50 |
| Chennai AP | Chennai | 340.80 |
| Mahabalipuram | Kancheepuram | 339.90 |
| Poonamallee | Tiruvallur | 336.00 |
| Red hills | Tiruvallur | 320.00 |

அரசு அதிகாரிகளின் காலதாமதாமான முடிவு தான் இந்த அழிவுக்கு காரணம் என்பதை அரசு அதிகாரிகள் மறுக்கின்றனர். ஆனால் அவர்கள் தரப்பில் உண்மை இல்லை.

இப்பொழுது அரசு அதிகாரிகள் தரப்பில் என்ன சொல்கிறார்கள் என்பதை பார்க்கலாம்.

பொதுப்பணித்துறையின் முதன்மை செயலாளர் என்.எஸ்.பழனியப்பன் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்," நாங்கள் விதிகளின்படியே செம்பரம்பாக்கம் ஏரியை திறந்து விட்டோம். அதை தாண்டி எங்களால் செயல்பட முடியாது"

அரசு அதிகாரிகள் தாமதித்தனர் என்பதையும் அவர் மறுக்கிறார். " கட்டுப்படுத்துதல் தலைமைப் பொறியாளரின் கைகளில் உள்ளது. எனக்கு தெரியும், அவர் திறமையாக கட்டுப்படுத்தினார். ஆனால் மிக அதிகமான மழை, ஓரளவிற்கு மேல் அவரால் கட்டுப்படுத்த இயலவில்லை. வெள்ள கையேட்டின் படி (flood manual) 2 மீட்டர் வரை தான் அவர்களால் தடுக்க இயலும்."

பொதுப்பணித்துறையின் பொறியாளர் சொல்வதை கேளுங்கள்," வழமையான பணியாட்களை தவிர்த்து அன்றைய இரவு ஒரு தலைமைப் பொறியாளர், ஒரு மூத்த பொறியாளர், ஒரு உதவி பொறியாளர் ஆகியோர் செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்தோம். மூத்த அதிகாரிகள் நிலைமையை ஆராய டிசம்பர் 1 நள்ளிரவு முதல் டிசம்பர் 2ம் தேதி அதிகாலை 5 மணி வரை ஏரிக்கு சென்று வந்தனர்."

"29000 கனஅடியை தாண்டி தண்ணீர் ஒரு போதும் திறக்கப்படவில்லை. நாங்கள் ஏரியை காப்பாற்றி யுள்ளோம், நாங்கள் வெளி யேறும் தண்ணீரை 29000 கனஅடி என்ற அளவில் வைத்துக்கொண்டோம். அதிகமான தண்ணீரை வெளியேற்றவில்லை. காலை 6 மணி வரை எங்களுக்கு 31000 கன அடி நீர் வந்து கொண்டிருந்த போதும் நாங்கள் வரையறையை மீறவில்லை."

"47.5 செ.மீ மழை என்பது நினைத்து பார்க்க முடியாதது. இயற்கையை தடுத்து நிறுத்த முடியாது. அடையாறு ஆற்றில் மழை பெய்யும் பகுதிகள் உள்ளன. வெறும் செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து திறந்துவிடப்பட்ட நீரினால் மட்டும் வெள்ளம் ஏற்படவில்லை. தாம்பரத்தில் அதே நேரத்தில் 50 செ.மீ மழை பெய்துள்ளது. இது கணிக்க முடியாத மழை. இவை எல்லாம் அடையாறு ஆற்றுக்கு தான் வருகின்றன. எனவே, இது வெறும் செம்பரம்பாக்கம் ஏரி திறந்துவிடப்பட்டதால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு அல்ல"

"ஒவ்வொரு முறையும் திறந்து விடப்படும் நீரின் அளவு அதிகரிக்கப்படும் போதும் நாங்கள் மாவட்ட கலெக்டர்கள், வருவாய்துறை அதிகாரிகள், உள்ளூர் தாசில்தார்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், சென்னை மாநகராட்சி, அனைவருக்கும் நாங்கள் தகவல் கொடுத்துள்ளோம்"

இவர்கள் சொல்வது சரிதானா? ஆராய்வோம்.

2வது அட்டவணை டிசம்பர் 1 அன்று காலை முதல் மாலை வரை செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து திறந்து விடப்பட்ட நீரின் அளவினை காட்டுகிறது. இந்த இரண்டாவது அட்டவணையின் படி காலை 6 மணியளவில்

| Time | Height (ft) | Inflow (cusecs) | Outflow (cusecs) |
|---|---|---|---|
| 6am | 22.1 | 1300 | 1300 |
| 9am | 22.3 | 7500 | 3000 |
| Noon | 22.7 | 14000 | 12000 |
| 3pm | 23.03 | 23629 | 20960 |
| 6pm | 23.2 | 29000 | 29000 |
| 9pm | 23.4 | 31000 | 29000 |

அணையின் நீர் மட்டம் 22.1 அடி. நீர்வரத்து 1300 கன அடி. நீர் வெளியேற்றம் 1300 கனஅடி நீர். நன்றாக இந்த தகவலை மனதில் பதிய வைத்துக்கொள்ளவும்.

மாலை 3 மணியளவில் ஏரிக்கு நீர்வரத்து 29000 கன அடியானது. அப்பொழுது நீர் வெளியேற்றம் 29000 கனஅடி நீர்.

இரவு 9 மணிக்கு நீர் வரத்து 31000 கனஅடி நீர். நீர் வெளியேற்றம் 29000 கன அடி நீர்.

மீண்டும் கவனிக்கவும் இரண்டாவது அட்டவணையின் படி காலை 6 மணியளவில் அணையின் நீர் மட்டம் 22.1 அடி. நீர்வரத்து 1300 கன அடி. நீர் வெளியேற்றம் 1300 கனஅடி நீர். அதாவது வந்த நீர் அப்படியே வெளியேற்றப்பட்டுக்கொண்டிருந்தது.

அப்படி இருந்தும் அணையின் நீர்மட்டம் காலை 9 மணியளவில் 22.3 அடியாக மாறியது எவ்வாறு என்பது இறைவனுக்கே வெளிச்சம். அது போகட்டும். காலை 9 மணியளவில் வந்து கொண்டிருந்த நீரின் அளவு 7500 கன அடி நீர். ஆனால் நீர் வெளியேற்றம் 3000 கனஅடி நீர்.

மதியவேளையில் 14000 கனஅடி நீர் வந்து கொண்டிருந்த போது நீர் வெளியேற்றம் 12000 கன அடி நீர்,

இங்கு தான் நாம் கவனிக்க வேண்டும். அதாவது காலையில் நீர் வரத்து 1300 கன அடி நீர் என்றிருந்த போது நீர் வெளியேற்றம் அதே அளவு. அந்நேரத்தில் இருந்தே கனத்த மழை ஆரம்பமாகி விட்டது. மேலும் அதற்கு முந்தைய தினமே திருவாளர் ரமணம் அவர்கள் மிக அதி கன மழையை எதிர்பார்க்கலாம் என அறிவித்து விட்டார்.

மேலும் பல பன்னாட்டு வானிலை ஆய்வு மையங்கள் சென்னையை பலத்த மழை புரட்டி போடும் என அறிவித்திருந்தன. மழையும் படிப்படியாக உயர்ந்து நீர்வரத்து 1300 கனஅடியில் இருந்து 7500 கனஅடியாக உயர்ந்திருந்தது. ஆனால் அந்த நேரத்திலும் ஆபத்தை உணராமல் அறிவாற்றலை பயன்படுத்தாமல் மந்த கதியில் 3000 கன அடி நீர் மட்டுமே வெளியேற்றப்பட்டுக் கொண்டிருந்தது.

காலை 6 மணியில் இருந்தே இவர்கள் சராசரியாக 10000 கனஅடி நீரையோ அல்லது அதற்கு அதிகமாகவோ வெளியேற்றிக் கொண்டிருந்தால் இவர்களுக்கு மொத்தமாக 29000 கனஅடி நீரையோ அல்லது அதற்கு மேலான அளவில் நீரையோ வெளியேற்ற வேண்டி வந்திருக்காது.

மொத்த கொள்ளளவான 24 அடியை நெருங்கிவிட்ட பிறகும் இவர்கள் தண்ணீரை திறந்து விட மந்த கதியில் யோசித்ததன் விளைவு (யாருடைய உத்தரவிற்காக காத்திருந்தனர் என்பது தெரியவில்லை) மாலை 6 மணிக்கு இவர்கள் இவர்களின் கூற்றுப்படி 29000 கன அடி நீரை திறந்து விட ஆரம்பித்தனர். (29000 கன அடி நீர் என்று சொன்னாலும் அதை விட அதிகம் என்பதை நாம் பின்னர் நிறுவலாம்). இந்த நீர் சென்னை மக்களை வந்தடைய 7 மணியில் இருந்து எட்டு மணியாகி விட்டது. இந்த நேரத்தில் இந்த வெள்ளத்தை மக்கள் எதிர்பார்க்க வில்லை. வீட்டை விட்டு வெளியேறும் சூழ்நிலையும் இல்லை.

மேலும் அவர்களுக்கு முறையான எந்த அறிவிப்பும் விடப்படவில்லை. இதனால் என்ன காரணத்தினால் வெள்ளம் என தெரியாமலேயே பலர் மூழ்கத் தொடங்கி விட்டனர்.

அரசு அதிகாரிகள் தாங்கள் தொலைக் காட்சிகள் வாயிலாகவும் காவல்துறையினர் வாயிலாகவும் பொதுமக்களுக்கு தகவல் தெரிவித்ததாக கூறுகின்றனர். முதல் விஷயத்தை பொருத்தவரை அன்றைய தினம் யாருக்கும் மின்சாரமே கிடையாது. பலருக்கு தொலைக்காட்சி சானல்கள் இந்த கடும் மழையில் தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை. அவ்வாறிருக்க தொலைக்காட்சி வாயிலாக எச்சரிக்கை விடுத்தோம் எனக்கூறுவது மடத்தனம். இரண்டாவது காவல்துறை

வாயிலாக எச்சரிக்கை. அப்படியொன்று நடக்கவே இல்லை என்று கூறுகிறார்கள் பொதுமக்கள்.

மூன்றாவது இரவு நேரத்தில் அதிக அளவு தண்ணீரை திறந்து விட்டது. பொதுமக்கள் உறக்கத்திற்கு செல்லும் நேரம் அது. மேலும் அன்றைய தினம் மழையின் காரணமாக சென்னையின் 75 சதவீதத்திற்கும் மேற்பட்ட இடங்களில் மின்சாரம் இல்லை. அதன் காரணமாக கிட்டத்தட்ட சென்னை முழுமையும் கும்மிருட்டு. இந்த இருட்டு சூழ்நிலையில் தான் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் பலர் தப்பித்து செல்லவும் தங்கள் உடைமைகளை காப்பாற்றிக்கொள்ளவும் இயலாமல் போனது.

எனவே, இரவு நேரத்தில் 29000 கன அடி தண்ணீரை திறந்தது மிகப்பெரிய தவறு. அதற்கு பதிலாக காலையிலேயே 15000 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டிருக்குமேயானால் இரவு நேரத்திலும் அதே அளவோ அல்லது அதை விட குறைவான அளவோ நீர் வெளியேற வகையாக இருந்திருக்கும். காலையில் 15000 அடி கன நீர் வெளியேற்றப்பட்டிருக்குமேயானால் அது பெரிய வெள்ளமாக இருந்திருக்காது. மேலும் காலை வெளிச்சத்தில் மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள ஏதுவாக இருந்திருக்கும்.

இந்த இடத்தில் தான் அரசு அதிகாரிகள் தப்பிழைத்திருக்கின்றனர்.

மற்றொரு ஒப்புநோக்கல் இதோ.

டிசம்பர் 1 அன்று பூண்டி நீர் தேக்கத்தில் இருந்து திறந்து விடப்பட்ட நீரின் அளவு 8552 கன அடி. 2 டிசம்பர் அன்று இது 30200 கன அடி. அதாவது செம்பரம்பாக்கத்தில் இருந்து திறந்து விடப்பட்ட அளவை விட அதிகம். 3 டிசம்பர் அன்று இதன் அளவு 36484 கனஅடி. ஆனால் அன்றைய தினம் செம்பரம்பாக்கத்தில் திறந்து விடப்பட்ட நீரின் அளவு வெறும் 11000 கன அடி நீர்தான்.

இவ்வளவு அதிகமான தண்ணீர் திறந்து விடப்பட்டும் கூவம் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படாதது ஏன்?

இது இயல்பாகவே ஏற்படும் கேள்வி.

இதற்கான பதில் இதுவாகத்தான் இருக்கக்கூடும். அதாவது அடையாறு ஆற்றில் திறந்து விடப்பட்டது 29000 கனஅடி நீர் அல்ல. அதைப் போல இரண்டு மடங்கு. அதாவது 60000 கன அடி நீருக்கும் அதிகம். இதை எப்படி இவ்வளவு துல்லியமாக சொல்ல இயலுகிறது என்றால் அடையாறு ஆற்றின் கொள்ளளவு 40000 கன அடி நீர். எனவே 29000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டிருக்குமேயானால் அது கரையை தாண்டி வெளியே வர வாய்ப்பே இல்லை.

இதற்கு அதிகாரிகள் தரப்பில் சொல்லப்படும் காரணம் 29000 கன அடி நீர் திறந்து விடப்பட்ட நேரத்தில் வெளியில் 50 சென்டிமீட்டர் மழை அடையாற்றின் பகுதிகளில் பெய்து கொண்டிருந்தது. மேலும் போரூர் ,தாம்பரம், முடிச்சூர் ஏரிகள் நிரம்பி அதன் தண்ணீரும் அடையாறுக்கு வந்து கொண்டிருந்தது. ஆனால் அதே சமயம் கூவம் ஆற்றின் பகுதிகளில் மழை குறைவாகவே பெய்தது என்பதே.

ஆனால் இது சரியான காரணம் அல்ல. ஏனெனில் 40000 கனஅடி நீர் கொள்ளளவு கொண்ட அடையாற்றிற்கு 29000 கன அடிநீர் மட்டுமே வந்து கொண்டிருந்தால் வெளியே இவர்கள் சொல்லும் வகையில் 10000 கன அடிக்கும் குறைவான தண்ணீரே வர வாய்ப்புள்ளது. ஆனால் தண்ணீர் கரையை கடந்து வெளியே வந்த வகையை கணக்கிட்டு பார்க்கையில் இது 60000 கன அடிக்கும் அதிகமான தண்ணீர். எனவே, செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து நிச்சயமாக 29000 கன அடிக்கு அதிகமான தண்ணீரே திறந்துவிடப்பட்டுள்ளது.

ஒரு வாதத்திற்கு இவர்கள் சொல்வதை ஏற்றுக்கொண்டாலும் இவர்கள் நேரத்தே விழித்துக் கொண்டு காலை 6 மணியில் இருந்தே சீராக 15000 கன அடி நீரை வெளியேற்றி இருந்தால் இரவிலும் அதே அளவே வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். அதன் காரணமாக அடையாற்றில் மொத்தத்தில்

25000க்கும் குறைவான கனஅடி நீரே வெளியேறி இருக்கும். இது அதன் அடக்க கொள்ளளவான 40000 கன அடிக்கும் குறைவு என்பதால் அது கரையை தாண்டி வெளியே வந்திருக்காது என்பதே உண்மை.

எனவே, எல்லா வகையிலும் அரசு அதிகாரிகள் கோட்டை விட்டதே இந்த வெள்ள சீரழிவுக்கு காரணம்.

http://www.thenewsminute.com/article/chennai-floods-what-happened chembarambakkam-negligence-or-nature%E2%80%99s-fury-36675

http://timesofindia.indiatimes.com/india/Delay-in-opening-sluice-gates-caused-flooding/articleshow/50099873.cms

http://thewire.in/2015/12/09/how-official-negligence-turned-a-natural-crisis-into-a-human-made-catastrophe-16938/

http://indianexpress.com/article/india/india-news-india/live-chennai-hit-by-heaviest-rains-in-a-century-normal-life-thrown-out-of-gear/

## அரசின் முன்னெச்சரிக்கை

ஒவ்வொரு வருடமும் மழை வெள்ள காலங்களில் எந்த தயாரிப்பில் இருக்குமோ அதே போன்ற சாதாரண மழை சூழலை எதிர்பார்த்தே அரசு எந்திரங்கள் இருந்தன. ஆனால் அவை அசாதாரணமான சூழ்நிலையை எதிர்பார்க்கவில்லை. ஓரிரு தினங்களுக்கு மழை காலங்களில் உணவு சமைத்து தருவது, சில பள்ளிக்கூடங்களில் அவசியம் ஏற்பட்டால் மக்களை தங்க வைப்பது என இதற்கான தயாரிப்பில் மட்டுமே அரசு எந்திரங்கள் தயாராகி இருந்தன.

ஒரு பேரிடருக்கான முன் எச்சரிக்கையில் அரசு இல்லவே இல்லை. உதாரணத்திற்கு தயார் நிலையில் உயிர் காக்கும் படகுகள், மருத்துவ வசதிகள், ஒரு வேளை தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டால் மக்களுக்கு அந்த வசதியை எவ்வாறு திரும்ப தருவது, பெட்ரோல் தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்து கொள்வது, பணத்தட்டுப்பாடு ஏற்படாமல் வங்கி ஏ.டி.எம்-களை இயங்க செய்வது, புரளிகள் பரவாமல் தடுப்பது என எல்லா விஷயங்களிலும் அரசு எந்திரங்கள் கோட்டை விட்டன.

இதன் காரணமாக மிக அசாதாரண சூழலை மக்கள் எதிர்கொள்ள வேண்டியதாகி விட்டது.

ஆனால் பெய்ததோ 100 வருடங்களில் இல்லாததொரு மழை. மூன்று மாதங்களில் பெய்ய வேண்டிய மழை மூன்றே நாட்களில் பெய்தது. விளைவு. மேற்சொன்ன எல்லா தட்டுப்பாடுகளும் ஏற்பட்டன. இதனை எதிர்பாராத அரசு என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தது. தொடர்ந்து ஒரு வாரத்திற்கான உணவு பொருட்களை தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் கூட அரசிடம் கிடையாது.

மொத்த அழுத்தமும் அரசு ஊழியர்கள் தலையில் விழுந்தது என்று சொன்னால் மிகையாகா. சென்னையில் வாழ்ந்த பல அரசு ஊழியர்கள் தங்கள் இல்லங்கள் தண்ணீர் சூழ்ந்த நிலையில் அவர்கள் இரவு பகலாக வீட்டிற்கு செல்லாமல் பணியாற்றினர். பலருக்கு இன்று என்ன கிழமை என்பதே தெரியாக நிலை. ஆனால் திட்டமிட்டு செயல் படாததன் காரணமாக அவர்களின் பணி வீணானது.

பல இடங்களில் தண்ணீர் வெள்ளம் சென்று கொண்டிருந்த நிலையிலும் அவர்கள் உணவு தயாரிக்க தேவையான பொருட்களை டன் கணக்கில் வாங்கி வந்து மின்சாரம் இல்லாத நிலையிலும் உணவு தயாரிப்பில் ஈடுபட்டனர்.

பல இடங்களில் பிளீச்சிங் பவுடரை தூவிய மாநகராட்சி ஊழியர்கள் கைகள் புண்ணாகி இருந்ததை காண முடிந்தது. அவர்களுக்கான போதுமான பாதுகாப்பு உபகரணங்கள் தரப்படவில்லை.

மேலும் பல இடங்களில் சென்னை மாநகராட்சி சமைத்த உணவுகளை விநியோகம் செய்ய போதுமான ஆட்கள் அவர்களிடம் இல்லாமல் போனதால் அவர்கள் அரசியல் கட்சி பிரமுகர்களை வைத்து விநியோகம் செய்ய வேண்டியதானது. இதன் காரணமாக

பார்ப்பவர்களுக்கு இது அரசியல் கட்சி பிரமுகர்கள் சமைத்து தந்த உணவு என்பது போல் ஆகிவிட்டது.

மேலும் பல இடங்களில் அரசு துறையினரிடம் ஒருங்கிணைப்பு இல்லாமல் போனது. இது வெள்ள நிவாரணப்பணியினை பாரதூரமாக்கியது.

அரசு எந்திரம் செய்த பணிகள் தேவைக்கு போதுமானதாக இல்லை என்பதும் அவை சமூக வலைதளங்களில் சென்று சேராததும் அவர்கள் எந்த உதவியையும் செய்யவில்லை என்ற உணர்வை மக்களுக்கு ஏற்படுத்தியது. உதாரணத்திற்கு சில பத்திரிகைகள் வெள்ளப்பெருக்கின் போது 10000 பேருக்கு சமைத்து உணவளித்ததை ஒரு முழு பக்கத்தில் விளம்பரப்படுத்தி இருந்த போது ஒரு மண்டலத்தில் 30000 பேருக்கு குறையாமல் ஒரு வேளைக்கு உணவு தயார் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

## அரசு என்ன செய்திருக்க வேண்டும்?

## தரம் தாழ்ந்த நாகரீகமற்ற அரசியல்வாதிகள்



சென்னை வெள்ளத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவுவதற்காக பெங்களூரில் இருந்து முஸ்லிம்களின் குழு ஒன்று சென்னை அண்ணாநகருக்கு வந்து அங்கு உணவு சமைத்து கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த அ.தி.மு.க வட்ட செயலாளர் கோ.பன்னீர் செல்வம் அவர்கள் சமைத்த உணவில் 2000 உணவு பொட்டலங்களை தர வேண்டும் என கட்டாயப்படுத்தி உள்ளார்.



அதனை முதலில் தர மறுத்தவர்கள் பின்னர் நிர்பந்தத்தின் காரணமாக அதற்கும் ஒத்துக்கொண்டனர். ஆனால் நேரமாகவே தானே உணவு பொட்டலங்களை வழங்க தொடங்க அங்கு வந்த பன்னீர் செல்வம் அங்கிருந்த முஸ்லிம்களை கடுமையாக தாக்கினார்.

இதன் காரணமாக அதிர்ச்சியுற்ற முஸ்லிம்கள் அங்கிருந்து அமைதியாக வெளியேறினர். அவர்களிடம் காவல்துறையில் புகார் அளிக்க சொன்ன போது நாங்கள் நிவாரணப்பணியாற்ற தான் இங்கே வந்தோம், புகார் அளிக்க அல்ல என்று கூறிச் சென்றது செருப்பால் அடித்தது போல் இருந்தது.

https://www.facebook.com/manohar.rs.7/videos/772861162819925/

### கவரப்பட்ட இந்துக்கள்

வெள்ள நிவாரணத்தில் ஈடுபட்ட முஸ்லிம்களின் செயல்களால் கவரப்பட்ட இந்துக்கள் இன்னொரு காரியத்திலும் ஈடுபட்டார்கள். முஸ்லிம்கள் நடத்திய மருத்துவ முகாமில் கலந்து கொள்ளுமாறு பொதுமக்களுக்கு கோவில்களில் இருந்த ஒலிபெருக்கி வாயிலாக அழைப்பு விடுவித்தனர். முஸ்லிம்களை தாக்க வருமாறு வடநாடுகளில் இந்து அமைப்புகள் கோயில்களில் வாயிலாக அழைப்பு விடுத்த நிலை தமிழ்நாட்டில் தலைகீழாக மாறிய விடயம் இந்துத்துவா அமைப்புகளின் தலையில் இடியாக இறங்கியது.

https://www.facebook.com 100007949440959/videos/1670508803224085/

# கோயிலுக்குள் முஸ்லிம்கள் வெளியில் இந்துக்கள்

## இன்னொரு காட்சி

அதில் வடசென்னையில் உள்ள மக்களுக்கு உதவுவதற்காக நிவாரண பொருட்களை தயார் செய்து அவற்றை ஓரிடத்தில் திரட்ட முற்பட்ட போது அதற்காக தங்களுடைய கோயிலை திறந்து விட்டு நிவாரண பொருட்களோடு முஸ்லிம்கள் உள்ளே நிற்க இந்துக்கள் வெளியே நின்ற காட்சியை கண்ட கண்களும் நெஞ்சமும் நெகிழும். முஸ்லிம்களை தீவிரவாதிகள் என காலம் காலமாக இந்துத்துவாவாதிகள் சொல்லிக் கொடுத்த பாடம் எல்லாம் தீவிரவாதிகளின் கையில் கோயிலை ஒப்படைத்த இந்துக்களின் நம்பிக்கையின் காரணமாக வீணாகிப்போனது.

https://www.facebook.com/sengis.khan/videos/1008169949239422/

## முகநூல் மற்றும் வாட்ஸ் அப் பதிவுகள்

### கல்யாணராமனை காணவில்லை.

கல்யாணராமன் என்பவர் பி.ஜே.பி. கட்சியை சேர்ந்தவர். இவர் அடிக்கடி தொலைக்காட்சிகளில் தோன்றி இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான கருத்துகளை சொல்பவர். இந்துக்களின் பாதுகாவலர்களாக இந்துத்துவாவாதிகளை காட்டிக்கொள்பவர். அடிக்கடி தன்னுடைய முகநூலில் மோசமான கருத்துகளை பதிந்து வாங்கிக்கட்டிக் கொள்பவர்.

ஆனால் இந்த முறை அவரை கேள்வி கேட்டது இந்து சகோதரனே. நாங்கள் வெள்ளத்தில் சிக்கி இருந்த போது எங்கே சென்றீர்கள்? எங்களை வெள்ளம் சூழ்ந்த போது எந்த மூலையில் ஒளிந்து கொண்டு இருந்தீர்கள்? அவர்களை பார்த்து என்ன தொழில் செய்கிறார்கள் என்று கேட்கிறீர்கள்.

கார்த்திக் சுப்புராஜ்
8 Dec at 9:08pm ·

திரு கல்யாண் ராமன் அவர்களே நாங்கள் எல்லாம் வெள்ளத்தில் சிக்கி கஷ்ட்டப்படும் போது எங்கே சென்றீர்கள் அப்போ எல்லாம் உங்களை காணவில்லை நானும் சென்னையில் தான் இருக்கேன் நானும் எனது வீடும் வெள்ளத்தால் சூழ்ந்த போது எங்கே சென்றீர்கள் எங்களை காப்பற்றாமல் எந்த மூலையில் ஒழிந்து கொண்டு இருந்தீர்கள் என்னையும் என் குடும்பத்தை வெள்ளத்தில் இருந்து மீட்டது இஸ்லாமியர்கள் தான் அவர்களுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் பத்தாது ஆனால் அவர்களை பார்த்து அநாகரிகமான வார்த்தையிலும் என்ன தொழில் செய்கிறார்கள் என்பது போல் பேசுகிறீர்களே அதையே அவர்கள் உன்னை பார்த்து கேட்பதுக்கு எவ்வளவு நேரம் ஆகும் சகோதரத்தை பேணுவது அவர்களுடைய நோக்கம் ஆனால் ஏதாவது ஒரு வகையில் வம்பிழுப்பதே உங்களின் நோக்கமாக உள்ளது

சக இந்துவான நாங்களே உங்களுக்கு ஆதரவு தர மாட்டோம் இதுநாள் வரை இஸ்லாமியர்களை எதிரியாக பார்த்தவர்கள் எல்லாம் இன்று விழித்து கொண்டார்கள் இஸ்லாமியர்களுக்கு ஒன்று

சக இந்துவான நாங்களே உங்களுக்கு ஆதரவு தர மாட்டோம் இதுநாள் வரை இஸ்லாமியர்களை எதிரியாக பார்த்தவர்கள் எல்லாம் இன்று விழித்து கொண்டார்கள் இஸ்லாமியர்களுக்கு ஒன்று இனிமே நாங்களும் அவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்போம் என் உயிரை மீட்டது ஒரு இஸ்லாமியன் அவனுக்கு தோல் கொடுப்பது என் கடமை இனிமே இஸ்லானியனை தொட்டல் முதல் அடி ஒரு இந்துவின் அடியாக தான் இருக்கும்

சக இந்துக்களான நாங்கள் உங்களுக்கு ஆதரவு தரமாட்டோம். இஸ்லாமியர்களை எதிரிகளாக பார்த்தவர்கள் எல்லாம் இன்று



விழித்து கொண்டார்கள். என் உயிரை மீட்டது ஓர் இஸ்லாமியன். அவனுக்கு தோள் கொடுப்பது என் கடமை. இனி இஸ்லாமியனை தொட்டால் முதல் அடி ஓர் இந்துவின் அடியாகத்தான் இருக்கும்.

## ஓவியக்கண்காட்சி

இதுவரை முஸ்லிம்களை தீவிரவாதிகளாக பிஞ்சுக்களின் நெஞ்சில் பதிய வைப்பதில் இந்துத்துவாவாதிகள் ஓரளவு வெற்றி கண்டு வந்தனர். ஆனால் அவர்களின் பல ஆண்டு உழைப்பை இந்த மழை ஓரிரு நாட்களில் அழித்துவிட்டது. ஆம் சென்னை வேலம்மாள் பள்ளியில் ஓர் ஓவியக்கண்காட்சியில் 4 வயதுக்கு உட்பட்ட மழலைகள் வரைந்த ஓவியத்தில் யு.கே.ஜி வகுப்பை சேர்ந்த அக்ஷரா சுருதி என்ற குழந்தை வரைந்த ஓவியம் அனைவரையும் கவர்ந்தது. அதில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட இந்துக்களுக்கு உதவி செய்பவராக முஸ்லிம்.

## குப்பைகளை சுத்தம் செய்த போது கண்டெடுத்த 1லட்சம் ரூபாய் 10 பவுன் நகை

சைதாப்பேட்டை பகுதியில் டிஎன்டிஜே வினர் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது குப்பைத்தொட்டியில் ஒரு டிபன் பாக்ஸ் கண்டெடுக்கப்பட்டது. அதை திறந்து பார்த்த போது அதில் கிட்டத்தட்ட 10பவுன் நகையும், ரூ 1லட்சம் ரொக்கப்பணமும் இருந்துள்ளது.

பணத்தையும், நகையையும் தொலைத்த துயரத்தில் தற்கொலைக்கு முயன்றுள்ளார் அதன் உரிமையாளர் பூரணி என்ற மூதாட்டி. கண்டெடுக்கப்பட்ட உடனேயே இது குறித்து விசாரித்த முஸ்லிம்கள் பூரணி - பாலகுமாரன் தம்பதியினருடைய பணமும் நகையும் தான் அது என்பதை உறுதிப்படுத்தினர்.

அந்த தம்பதியர்களிடம் பணத்தையும், நகையையும் பத்திரமாக ஒப்படைக்க நகைகளை சரிபார்த்த பிறகு, பணத்தையும் சரிபார்த்து டிபன் பாக்ஸோடு அதை பெற்றுக்கொண்டனர்.

அதனை பெற்றுக்கொண்ட உரிமையாளர் கண்ணீர் மல்க முஸ்லிம்களுக்கு நன்றி கூறியது எந்த சூழ்நிலையிலும் முஸ்லிம்கள் வழி தவறமாட்டார்கள் என்பதை எடுத்து காட்டுவதாக அமைந்தது.

https://www.facebook.com/abdulnaser.misc/videos/988913804502698/

## கர்ப்பிணி பெண்ணை காப்பாற்றிய யூனூஸ்

நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்த முகமது யூனூஸ் சென்னையில் 'இ-காமர்ஸ்' நிறுவனம் நடத்தும் இளைஞர். டிசம்பர் 1-ம் தேதி இரவு சென்னையை சவட்டி எடுத்தது மழை. அந்த நேரத்தில், ஊரப்பாக்கம் பகுதியில் மக்கள் கழுத்தளவு தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று முகமது யூனுஸுக்கும் 'வாட்ஸ் அப்'பில் தகவல் பகிரப்படுகிறது.

அப்போது இரவு மணி 10.30. தனது நண்பர்கள் முஸாஃபர், கோபிநாத், ரியாஸ் இவர்களைக் கூட்டிக் கொண்டு கிளம்புகிறார் யூனுஸ். நால்வரும் பெசன்ட் நகரில் மீனவர்களிடம் ஏழு படகுகளை கேட்டு வாங்கி லாரியில் ஏற்றிக் கொண்டு ஊரப்பாக்கம் நோக்கிப் புறப்படுகிறார்கள்.

அடுத்து நடந்தவைகளை யூனுஸ் விவரித்தார். ''எங்களைவிட வேகமாக செயல்பட்டனர் மீனவ நண்பர்கள். நாங்கள் நால்வரும் ஆளுக்கொரு படகில் இருந்தோம். கிட்டத்தட்ட 6 அடிக்கும் மேல் சென்று கொண்டிருந்த தண்ணீர் நான் சென்ற படகை தலைகீழாக கவிழ்த்துப் போட்டது. எனக்கு நீச்சல் தெரியாது. நல்லவேளை, மீனவ நண்பர்கள் காப்பாற்றிவிட்டார்கள்.

அப்போதுதான் அங்கிருந்த பெட்ரோல் பங்க் பக்கத்தில் ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களும் கழுத்தளவு தண்ணீரில் தத்தளித்த படி எங்களைப் பார்த்துக் கை அசைத்துக் கொண்டிருந்ததை கவனித்தேன். அருகில்



சென்று அவர்களை படகில் ஏற்றிய பிறகு தான் அந்த பெண் பிரசவ வலியில் துடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவரது பெயர் சித்ரா. உடனிருந்தவர் அவரது கணவர் மோகன். அதிகாலை 5.30 மணி. பெருங்களத்தூர் அருகே ஒரு பாலத்தின் அருகே சித்ராவையும் மற்றவர்களையும் இறக்கிவிட்டு விட்டு மற்றவர்களை மீட்பதற்காக மீண்டும் ஊரப்பாக்கம் நோக்கிப் படகை செலுத்தினோம்.


Satheesh Kumar
31 mins ·

கர்ப்பிணி பெண்ணை மீட்ட தோழர் யூனிஸின் பெயரை தன் குழந்தைக்கு சூட்டிய மோகன் சித்ரா தம்பதியினர்

மதத்தால் பிரிக்க முயலும் பாஜக ஆர்.எஸ்.எஸ். இந்து முன்னணி கும்பலுக்கு இப்பதிவு சமர்ப்பணம்

TODAY

Hi sir. This is Mohan from Urappakkam. My wife Chitra has successfully given birth to a girl baby. We have named our girl as 'Yunus' sir. We take pride in this and we want you to come and make her one day you are free sir. Also we will not forget the theory of money you taught us on boat sir. You are our leader and government sir. Hereafter I will give 50 percent of my salary to the poor only and help needy. You are great. 21:11

அன்று மட்டுமே எங்களது குழுவினர் சுமார் 450 பேரை ஆபத்தில் இருந்து காப்பாற்றி இருக்கிறோம். இன்னமும் எங்களது பயணம் நிற்கவில்லை. அழைப்புகளைக் கேட்டு ஓடிக்கொண்டே இருக்கிறோம்'' என்று சொன்னார் யூனுஸ்.

யூனுஸால் காப்பாற்றப்பட்ட சித்ரா அன்றைய தினமே பெண் குழந்தைக்கு தாயாகி இருக்கிறார். தங்களையும் தங்களது வாரிசையும் காப்பாற்றிக் கரை சேர்த்த யூனுஸை போற்றும் விதமாக அவரது பெயரையே தங்களது பெண் குழந்தைக்கு வைத்திருப்பதாக 'வாட்ஸ் அப்'பில் வாஞ்சையோடு தகவல் பகிர்ந்திருக்கிறார் சித்ராவின் கணவர் மோகன். இதில் நெகிழ்ந்து போன யூனுஸ், அந்தக் குழந்தையின் படிப்புச் செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்வதாக தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்துப் பேசிய யூனுஸ், ''இதற்கு முந்தைய மழைக்கு நுங்கம்பாக்கத்திலும் பள்ளிக்கரணையிலும் உள்ள எனது இரண்டு வீடுகளை மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்காக கொடுத்திருந்தேன். அங்கு தங்கி இருந்த மக்கள் என்னை வாயாற வாழ்த்தினார்கள்.

சித்ரா - மோகன் தம்பதி தங்கள் குழந்தைக்கு என் பெயரை வைத்திருக்கிறார்கள். அந்தக் குழந்தைக்குப் படிப்புச் செலவை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். விவசாயிகளையும்



மீனவர்களையும் அவர்கள் வாழும் நிலையில் இருந்து முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதும் மழை எங்களுக்குத் தந்திருக்கும் பாடம். நமக்குத் தெரிந்த டெக்னாலஜியை வைத்து அந்த இலக்கை எட்டுவதற்காக ஒரு குழுவை அமைத்துக் கொண்டிருக்கிறோம்'' என்று சொன்னார்.

**நன்றி - தி இந்து தமிழ் தினசரி**

இதில் காப்பாற்றப்பட்ட கர்ப்பிணி பெண்ணின் கணவர் மோகன் வாட்ஸ்அப்பில் ஒரு செய்தியை மனம் நெகிழ்ந்து கூறுகிறார்.

"உங்களுடைய பெயரை என் பெண்ணிற்கு சூட்டுவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம் யூனுஸ் அவர்களே..நீங்கள் ஒரு நாள் என் பெண்ணுடன் கழிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். மேலும் படகில் பணம் பற்றிய தத்துவத்தை நீங்கள் கூறியதை நாங்கள் மறக்க மாட்டோம். நீங்கள் தான் எங்கள் தலைவன். நீங்கள் தான் எங்கள் அரசாங்கம். இனி வருங்காலங்களில் என்னுடைய சம்பளத்தில் 50 சதவீதத்தை ஏழைகளுக்கும் தேவைப் படுபவர்களுக்கும் செலவிடுவேன்" என்று உருக்கமாக பதிவிட்டுள்ளார்.

இது தான் ஓர் இஸ்லாமிய அழைப்பாளனின் பணி. யூனுஸ் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்ற மட்டும் செய்யவில்லை. படகில் அவர்களுக்கு நல்லது கெட்டதை எடுத்து கூறியுள்ளார். அது அவர்களின் மனதில் பசுமரத்தாணியாக பதிந்துவிட்டது.

http://bit.ly/1jPkXvg

## மும்பை முஸ்லிம் ஆட்டோ ஓட்டுனரின் செயல்


இந்தியா

மும்பையில் தமிழில் பேசியதால் பெண்ணிடம் பணம் வாங்க மறுத்த ஆட்டோ ஓட்டுநர்

Updated: December 10, 2015 10:30 IST

கோப்பு படம்: ம.பிரபு

சென்னையில் கடந்த வாரம் பெய்த கனமழையால் சென்னைவாசிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி, தற்போது இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இந்த செய்திகள் பத்திரிகை, டிவி, சமூக வலைதளங்கள் மூலம் நாடு முழுவதும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில், மும்பையில் வாழும் தமிழ் பெண்ணுக்கு நடந்த சம்பவம் உருக்கமாக அமைந்துள்ளது.

சென்னையில் கடந்த வாரம் பெய்த கனமழையால் சென்னைவாசிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி, தற்போது இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இந்த செய்திகள் பத்திரிகை, டிவி, சமூக வலைதளங்கள் மூலம் நாடு முழுவதும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில், மும்பையில் வாழும் தமிழ் பெண்ணுக்கு நடந்த சம்பவம் உருக்கமாக அமைந்துள்ளது.

சென்னையைச் சேர்ந்த ஷாலினி கிரிஷ், மும்பையில் நகைக்கடை வைத்துள்ளார். சில தினங்களுக்கு முன்பு அவர் ஆட்டோவில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, சென்னை யில் இருக்கும் உறவினர்களை தொடர்பு கொண்டு தமிழில் பேசி னார். இதைக்கேட்ட மும்பையைச் சேர்ந்த முஸ்லிம் ஆட்டோ ஓட்டுநர், 'மேடம் ஆப்கே பெஹசான் வாலே சப் டீக் ஹை?' (மேடம் உங்களுக்குத் தெரிந்தவர்கள் அனைவரும் நலமுடன் இருக் கிறார்களா?) என்று கேட்டார். 'ஆமாம்' என்று சொல்லிவிட்டு பேசிக் கொண்டிருந்தார்.அவர் இறங்கும் இடம் வந்ததும் உரிய தொகையைக் கொடுத்தபோது, ஆட்டோ ஓட்டுநர் அதை வாங்க மறுத்துள்ளார். நான் ஏழை; என்னால் உங்களுக்கு உதவ முடிந்தது இவ்வளவு தான். அல்லா அவர்களை காப்பாற்றட்டும்' என்று

இந்தியில் கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பி விட்டார். இந்த சம்பவத்தால், பதில் பேச முடியாமல் ஷாலினி திகைந்து நின்றுள்ளார். இச்சம்பவத்தை தன் முகநூல் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ளது குறிப்பிடத் தக்கது

https://www.facebook.com/permalink.php?story_fbid=1532808810373772&id=100009340035358

## மற்றொரு ஆட்டோ டிரைவர்

இன்று சென்னையில் ஆட்டோவில் செல்ல வேண்டிய சூழல். நானும் நண்பரும் ஆட்டோவில் போனோம்.

இறங்க வேண்டிய இடம் வந்தது. ஆட்டோ ஓட்டுனர் பணம் வாங்க மறுத்து விட்டார். "ஏன்ணே..?"

"பாய்மார்கள் இருக்கப்போய்தான் இந்த வெள்ளத்திலிருந்து பிழைத்தோம்"னார்.

'அண்ணே அது மனிதனுக்கு மனிதன் செய்யவேண்டிய கடமை; இது ஒரு மார்க்க கடமை., வேடிக்கை பார்த்துக்கிட்டு இருந்தா, இறைவன் தண்டிப்பான் அதான் செஞ்சோம்"னு சொல்லி பணம் கொடுத்தோம். அவர் கண்கள் கசிந்தது. நமக்கும்தான்!

உடல் அழுகிய நிலையில் கிடந்தவரின் உடலை மீட்ட முஸ்லிம்கள்

https://www.facebook.com/kaleelrahuman.rahuman/videos/757625644368986/

இஸ்லாமியர்களின் சேவை குறித்து செய்தியாளர்களின் கருத்து.....!!

**நன்றி : நியூஸ் 7 தொலைக்காட்சி**



## தமிழக நிவாரண பணிகளில் இஸ்லாமியர்களின் பங்களிப்பு

## பத்திரிக்கையாளர்களின் நேரடி வாக்குமூலம்

ஒரு குடும்பத்தில் வயதான தம்பதியினர். அவர்களின் மகனோ வெளிநாட்டில். அந்த பெரியவர்களை தொடர்பு கொள்ள மகனால் முடியவில்லை. பின்னர் அவர்கள் இந்த செய்தியினை முஸ்லிம்களுக்கு தெரியப்படுத்தி உள்ளனர். முஸ்லிம்கள் அவர்களை தேடிப்பிடித்து அவர்கள் வீட்டிற்கு சென்று உணவளித்த போது தான் அவர்கள் சைவம் என்பது தெரியவந்தது. உணவளிக்க வந்த



**கோட்டூர் புரம் பள்ளிக்கூடம் தூய்மை படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள சகோதரர் அர்ஷாத் அவர்களுக்கு பள்ளி தலைமை ஆசிரியர் தண்ணீர் புகட்டும் காட்சி**

முஸ்லிம்கள் மன்னிப்பு கோரி பின்னர் சைவ உணவை அவர்களுக்கு அளித்த போது மனமுருகி விட்டனர் அந்த தம்பதிகள். பின்னர் அவர்களை அந்த இடத்தை விட்டு வருமாறு அவருடைய மகன் கோரிய போது நான் எங்கும் வர மாட்டேன். இங்கு உள்ளவர்களுடன் இருப்பேன். இங்குள்ள முஸ்லிம்கள் என்னை பார்த்து கொள்வார்கள் என கூறியது அனைவரின் கண்களையும் கலங்க வைத்தது என கூறும் பத்திரிகையாளர்கள்.

https://www.facebook.com/
100006939258371/videos/1614698885438071/



அந்த அல்லாஹ் உங்களை நன்றாக வைப்பார். பிராம்மணர் ஒருவரின் வாழ்த்து

https://www.facebook.com/
syed.mohamed.12177/videos
530618883781476/



யாரும் இங்கு எட்டி பார்க்கவில்லை. யாரும் எந்த உதவியும் செய்ய வில்லை. முஸ்லிம்கள் தான் அனைத்து உதவிகளையும் செய்தனர். அவர்கள் மட்டுமே இங்கே அனுமதிக்கப்படுவார்கள். வேறு எந்த கட்சியை சேர்ந்தவர்களுக்கும் அனுமதி கிடையாது. இஸ்லாமியர்களின் ஆட்சி தான் வேண்டும் என்று சொல்லும் மாற்று மத சகோதரர்கள்

https://www.facebook.com/
syed.mohamed.12177/videos
530816100428421/



கழுத்தளவு தண்ணீரில் நின்று கொண்டு உணவு வழங்கிய முஸ்லிம்கள்

https://www.facebook.com/
dinakarannews/videos/1042717142433085/



யாருமே உதவி செய்யாத போது திடீரென்று 4 ஆயிரம் முஸ்லிம்கள் வந்து உதவி செய்தார்கள் - புளியந்தோப்பு துரை கண்ணன்

https://
www.facebook.com/
318795831612907/
videos/
565972840228537/

ரவி கிருஷ்ணமூர்த்தி என்பவர் தன் பதிவில் இஸ்லாமிய மக்கள் ஆத்மார்த்தமான சிறப்பான பணிகள் சேவைகள், உதவிகள் மூலம் அனைவரும் உணர்வால் உள்ளத்தால் இணைந்தவர்கள் என காட்டியிருக்கிறார்கள். அனைத்து மசூதிகளும் மக்கள் தங்குவதற்காக திறந்து சுடசுட உணவும் அளித்தார்கள். பல இஸ்லாமிய சகோதரர்கள் கழுத்தளவு மழை நீரில்


Ravi Krishnamoorthy

நம் நாட்டின் அனைத்து மக்களுக்கும் தமிழகத்தின் இஸ்லாமிய மக்கள் சென்னையில் இந்த இயற்கை இடரின்போது ஆத்மார்த்த, சிறப்பான பணிகள், சேவைகள், உதவிகள் மூலம் அனைவரும் உணர்வால் உள்ளத்தால் இணைந்தவர்கள் என்று காட்டியிருக்கிறார்கள். அனைத்து மசூதிகளும் மக்கள் தங்குவதற்காக திறந்து சுட சுட உணவும் அளித்தார்கள். பல இஸ்லாமிய சகோதரர்கள் கழுத்தளவு மழை நீரில் சென்று பசியில் தவித்த மக்களுக்கு உணவு வழங்கியுள்ளார்கள். பல இஸ்லாமிய சகோதரிகளும் தாயுள்ளத்துடன் சேவை புரிந்துள்ளார்கள். இவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். (நன்றி என்பது சின்ன வார்த்தை) அனைவருக்கும் தலை வணங்குகிறேன். கடைசியாக, நான் எதுவுமே செய்யவில்லை என்ற குற்ற உணர்ச்சியில், சலாம் மக்களே!!

Write a comment...

சென்று பசியில் தவித்த மக்களுக்கு உணவு வழங்கியுள்ளார்கள். பல இஸ்லாமிய சகோதரிகளும் தாயுள்ளத்துடன் சேவை





புரிந்துள்ளார்கள். இவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். நன்றி என்பது சின்ன வார்த்தை. அனைவருக்கும் தலை வணங்குகிறேன். (இறைவனுக்கு மட்டுமே தலை வணங்கவேண்டும் சகோதரா) கடைசியாக, நான் எதுவுமே செய்யவில்லை என்ற குற்ற உணர்ச்சியில், சலாம் மக்களே என்று பதிவிட்டுள்ளார்.

விடிய விடிய பொதுமக்களுக்காக தண்ணீர் சப்ளை செய்யும் பாலவாக்கம் பெரிய பள்ளிவாசல்

கடந்த மூன்று நாட்களும் என்னை தொடர்பு கொண்டு உதவியவர்களில் 70%க்கும் மேலே இசுலாமியர்கள் தான்.

களப்பணியிலும் அவர்களே பெரும் பான்மை.நம் தேசத்தில் மட்டுமே சிறுபான்மை.

https://www.facebook.com/photo.php?fbid=17832822516871&set=a.100367876979573.1073741828.100010190820245&type=3&fref=nf


Renold Robinson Roy
1 hr • Richardson, Texas •

ஐயா முஸ்லிம் தம்பிகளா எங்கடா இருந்திங்க இவ்வளவு நாட்களாய்... உங்களையும் உங்கள் அன்பு நெஞ்சங்களையும் இந்த உலகிற்கு காட்டுவதர்க்காகவே இந்த வெள்ளம் சென்னை இல் வந்தது போல...

நன்றிகள் கோடி !!


எம்பெருமான் ஈசனை அயோக்கிய பய என்றார்கள்...!
ஒவ்வொரு ஸனாதனதர்மியும் வெறி கொள்ளும் அளவிர்க்கு ஸனாதன தர்மத்தை எள்ளி நகையாடினார்கள்...!
இவையெல்லாம் நடந்தது இதே சிங்கார சென்னையில் இந்த"அதர்ம" ஆட்சியில்தான்...! நயன்தாராவையும்.. அமிதாப்பச்சனையும் காண லட்சம், லட்சமாய் கூடிய இந்த ஆட்டுமந்தை மக்களின் கண்முன்னால்தான் இந்த அக்கிரமம் நடந்தது...! அனைவரும் கைகட்டி வேடிக்கை பார்த்தார்கள்...!!!
"எப்பொழுதெல்லாம் தர்மம் தாழ்ந்து, அதர்மம் தலைதூக்குகிறதோ அப்பொழுதெல்லாம் நான் அவதரிப்பேன் என்ற கடவுள் வாக்கு பொய்க்குமா"..?
அப்பொழுதே என் மனம் ஆழிப்பேரலையை எதிர்பார்த்தது...!!!
"இதோ வருணபகவான் வடிவில்" சென்னை சுத்தமாகட்டும்...!
கோமாதாவின் குருதி கடலில்

இவ்வளவுக்கும் நடுவில் இந்த அழிவு தேவை தான் என பதி விட்டிருந்தான் ஓர் இந்துத்துவாவாதி - அந்த இந்துத்துவா வாதியின் உளறல் இதோ...

கம்யூனிஸ்ட் தலைவர் அருணன் அவர்கள் தங்களின் முகநூலில் பின்

வருமாறு பதிவிட்டிருந்தார்கள்



**Arunan Kathiresan**
2 hrs ·

இந்த கருப்பு நாளை நீங்கள் மறந்தாலும் நாங்கள் மறவோம்

இன்று கருப்பு நாள். பாபர் மசூதியை ஆர் எஸ் ஸ் - பா ஜ க திருக்கூட்டம்
தகர்த்து தரைமட்டமாக்கிய நாள். 23 ஆண்டுகளாகியும் நமது முஸ்லிம் சகோதரர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. அந்தக் கிரிமினல் குற்றத்தைச் செய்த எவருக்கும் உரிய தண்டனை கிடைக்கவில்லை; அந்தப் பயங்கரவாத செயலுக்கு பரிகாரமாய் மீண்டும் அந்த மசூதி கட்டித் தரப்படவில்லை. தங்க ளுக்கு இழைக்கப்பட்ட அந்த அநீதியை மறந்து முஸ்லிம்கள் வெள்ளநிவாரண பணிகளில் மூழ்கியிருக்கிறார்கள் . அந்த மகத்தான மாண்புக்கு இதரர்கள் காட்டும் மரியாதை இந்த உறுதிமொழியே:
"சகோதரர்களே , நீங்கள் அந்த அநியாயத்தை இன்று மறந்தாலும் நாங்கள் மறக்கவில்லை; உங்களுக்கு நியாயம் கிடைக்கும் வரை நாங்களும் போராடுவோம்"

## அருணன் அவர்கள்

தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை மறந்து முஸ்லிம்கள் வெள்ள நிவாரண பணிகளில் மூழ்கியிருக்கிறார்கள். அந்த மகத்தான மாண்புக்கு இதரர்கள் காட்டும் மரியாதை இந்த உறுதி மொழியே: "சகோதரர்களே, நீங்கள் அந்த அநியாயத்தை மறந்தாலும் நாங்கள் மறக்கவில்லை: உங்களுக்கு நியாயம் கிடைக்கும் வரை நாங்களும் போராடுவோம்.

சென்னையில் ஒரு சில இந்துக் கோயில்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கி உள்ளனர். இவர்களை கோயில் நிர்வாகம் தங்கச் சொல்லி அழைக்கவில்லை என்று கூறுகிறார்கள். அதே சமயம் இவர்கள் தங்கி இருப்பதை குறித்து கோயில் நிர்வாகம் எதிர்ப்பு தெரிவிக்கவும் இல்லை. ஆனால் சென்னையில் உள்ள பெரும்பாலான இந்துக் கோயில்களில் தங்க அனுமதி கேட்டதற்கு மறுத்தாக களப்பணியாளர்கள் சுட்டிக்காட்டு கிறார்கள்.



**ராஜராஜ சோழன்** feeling sick in **Chennai.**
2 mins · Chennai ·

என் பெயர் இராஜா இராஜா சோழன் மிகுந்த மன வருத்தத்தில் எழுதுகிறேன்.
இராஜ வம்சம் அல்ல ஆனால் சமூக ஆர்வலர். நான் இப்பொழுது ஒரு #மசூதியில் #அடைக்கலம் பெற்றுள்ளேன். என் #இந்துத்துவ மக்களுக்கு ஒரு #கேள்வி.? #மசூதிகளும், #தேவாலயங்களும் வாசல் திறந்து வைத்து #அடைக்கலம் தரும் மனித நேயர்கள். ஆனால் கோயில்கள் #திறக்கப்படவில்லை ஏன்.? என் #இனிய #இஸ்லாமிய #சகோதரர்கள் என்னை #அன்போடு கவனித்து கொள்கிறார்கள். ஆனால் என் #இந்துத்துவம் #எங்கே..?? ஏன்..ஏன்.. ஏன்..??? நான் #வெட்கம் விட்டு கூறுகிறேன் நான் ஒரு #கீழ்ஜாதி என்பதால் தானே எனக்கு #அனுமதி #மறுக்கப்பட்டது.. ஆனால் #இஸ்லாம் அப்படி அல்ல #பணம் #உள்ளவர்களும் #இல்லாதவர்களும் யாவரும் சமம் #நபியின் #உம்மத்துகள் இது நான் என் #சகோதரர் (சபீர்) கேட்டு #தெரிந்து கொண்டேன். #தயவு செய்து இனிமேல் #இஸ்லாமியர்களை #தீவிரவாதிகளாக #சித்தரிக்காதீர்கள் ஏனெனில் அவர்கள் #இரக்கம் #மனித நேயம் உள்ளவர்கள் #பழகி பாருங்கள் புரியும். மக்களின் #துன்பத்தில் #அரசியல் #செய்யாதீர்கள்.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் தங்கியிருந்த மக்களக்கு உணவுகள் வழங்குவதற்காக இஸ்லாமியர்கள் இந்துக் கோயில்களுக்குள் நுழைந்து உணவுகளை விநியோகித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

'இந்துக் கோயில்களுக்குள் இஸ்லாமியர் கள் எப்படி நுழையலாம்?' என்று எந்த இந்துவாவது கேள்வி எழுப்பினால் அங்கிருக்கும் மக்களே உதைத்து அனுப்பும் சூழல் அங்கிருக்கிறது.

படத்தில் இஸ்லாமியர் ஒருவர் இந்து மதத்தின் நம்பிக்கையை மதிக்கும் பொருட்டு காலணிகளை கையில் எடுத்துக் கொண்டு செல்கிறார். இதுபோன்ற காட்சிகளை வட இந்தியாவில் காண முடியுமா என்பது சந்தேகமே.

பெரியார் மண்ணில் வட இந்திய மாநிலங்களைப் போல் மதத்தாண்டவம் உக்கிரமாக இல்லை என்பதற்கு இப்புகைப்படம் ஓர் உதாரணம்.

**தமிழச்சி, 06.12.2015**

சில நாட்களுக்கு முன்புவரை முஸ்லிம்களை கடுமையாக விமர்சித்து வந்த அய்யாசாமி எனும் பெயரில் முகநூலில் இருக்கும் சாமியப்பன் அவர்களின் கருத்து.



Ayya Sami
இதுவரை எதிரிகளாய் பார்த்த
இஸ்லாமியர்களை என் குடும்பத்தில்
ஒருவனாய் பார்க்க வைத்தது
சென்னையில் அவர்களின் தொண்டு.

எங்கு திரும்பினாலும் இஸ்லாமிய
அமைப்பினர் ச்சீ இவர்களையா
இத்தனை நாள் திட்டி தீர்த்தோம்
நினைத்தாலே அருவருப்பாக
இருக்கிறது.

தீவிரமாய் பணி செய்து கொண்டிருந்த
தவ்ஹீத் பனியன் போட்டிருந்த ஒரு
இருபது வயது மதிக்கத்தக்க ஒரு
சிறுவனை அழைத்து கேட்டேன்
இதற்கெல்லாம் உங்கள் அமைப்பு
உங்களுக்கு சம்பளம் கொடுக்கிறதா?

என்னை அடிக்காத குறையாக ஒரு
பார்வை பார்த்தார் "அல்லாக்காக
செய்றோம் சம்பளமெல்லாம் கிடையாது"
எங்க சமாத்துல எங்க கிட்டேயும் வெள்ள
நிவாரணத்துக்கு வசூல் பண்ணிட்டாங்க
என்று பெருமிதத்தோடு சிரித்தார்.

இன்னொரு கருப்பு பனியன் தமுக
பாயிடமும் அதே கேள்வியை
கேட்டுப்புட்டேன் "யோவ் வேலைய்
விட்டுட்டு வந்து இங்க நிக்கிறோமுயா"

இதெல்லாம் கவனித்து கொண்டிருந்த மற்றொரு அமைப்பினர் "யோவ் ஓடிப்போயிரு சோலிய கெடுக்காத என்பது போல் பார்த்தார். இதற்கு மேல் அவர்களின் உளப்பூர்வமான உழைப்பை சோதித்து கொச்சை படுத்த விரும்பவில்லை.

இவர்களிடம் இன்னும் கொஞ்சம் நேரம் பேசினால் நானும் ஒரு பனியனை மாட்டி இருப்பேன். அவர்கள் செயலால் முஹமதிய மதத்திற்கே மாறியிருப்பேன் போல.

உங்க எல்லோருக்கும் ஒரு மிலிட்ரி சல்யூட் பாய்ஸ்.

அரக்கோணம் ஏ. சாமியப்பன்

வெள்ளத்தில் மூன்று மாத குழந்தையை பத்திரமாக மீட்டு பாதுகாப்பாக கடைசி வரை வைத்து பெற்றோரிடம் ஒப்படைத்த இஸ்லாமிய சகோதரன்.



**மனம் நெகிழும் காட்சி**

தந்தை பெரியார் அடிக்கடி சொல்வார்

தூரத்தில் நின்று வேடிக்கை மட்டும் "பார்ப்பான்"



சென்னையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கவோ, உதவி செய்யவோ இவர்கள் முன்வரவில்லை. ஆனால் நாளை டி.வி. பத்திரிக்கை போன்ற ஊடகங்களுக்கு பேட்டி கொடுக்கும் போது மட்டும் தெளிவாக பேசுவார்கள்!!!

இவர்கள் என்றுமே வரலாற்றை எழுத மாட்டார்கள். யாராவது எழுதிய வரலாற்றில் தங்களுடைய பெயரை மாற்றி எழுதும் கூட்டம் தான் இவர்கள்.

இதைப் போன்ற சமயங்களில் இவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்தி புறக் கணித்துக் காட்ட வேண்டிய கட்டாயம். . . !!

https://www.facebook.com/
santhosh.guru.395/posts/508530519324789

# சிரியாவின் உள்நாட்டு யுத்தம் சீரிய சேவை ஆற்றும் அமெரிக்கா மற்றும் ரஷ்யா!



**விளைவு**

மேலை நாட்டவர்களின் சதிகளால் ஷியா-சன்னி பிரச்சனை மூண்டது. முஸ்லிம்களை முஸ்லிம்கள் கொலை செய்திடும் நிலை ஏற்பட்டது. பல லட்சம் முஸ்லிம்கள் வீடு விட்டு வெளியேற்றப் பட்டார்கள். இதை சுவீடனின் ஆய்வு நிறுவனம் இப்படி கூறுகிறது.

Pushed by growing poverty and safety fears, million Muslims have moved or fied to affluent states of europe. Once they settled in these states, many muslim migrants are forced to deal with in great deal of a suspicion as well as growing anti-immigrant sentiments which has led to riots and calls for explusion in European states."

**சென்ற இதழ் தொடர்ச்சி. . .**

'இப்படி செய்ததினால் முஸ்லிம்களிடம் வறுமை அதிகரித்து அவர்களின் உயிருக்கு பாதுகாப்பின்மை ஏற்பட்டுள்ளது. இதனால் 2 கோடிக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் ஐரோப்பாவின் வளமிக்க நாடுகளுக்கு தப்பியோடியுள்ளார்கள். ஒருவேளை அந்நாடுகள் முஸ்லிம்களின் குடியேற்றத்தை அங்கிகரித் தால், பிறகு அங்கு முஸ்லிம் கள் சந்தேகத்திற்குரியவர் களாகவே நடத்தப்படு வார்கள், வளர்ந்து வரும், குடியேற்றத்திற்கு எதிரான சிந்தனைகள் வலுப்பெறும். இவை கலவரங்களுக்கு வகை செய்யும். பிறகு ஐரோப்பிய நாடுகள் முஸ்லிம்களை நாடு கடத்திட வேண்டும் என்

றொரு அழைப்பை விடுப் பார்கள். புலம் பெயரலுக்கு எதிரான இயக்கங்கள். புலம் பெயர்ந்தவர்களைத் தாக்கி கலவரங்களை நிகழ்த்தி அவர்களை வெளியேற்றுவார்கள்.

(Source : Huntington's Clash of Civilisation and Russia INGMAR OLDBEPG, Research Associate, Swedish Institute of International Affairs)

## அகதிகள் ஆக்கப்படும் முஸ்லிம்கள்

இதுவே இன்று முஸ்லிம் உலகில் நிதர்சனமாக நடந்துக் கொண்டிருப்பவை. சிரியாவில் மட்டுமே 76 லட்சம் முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். பல்லாயிரக் கணக்கானோர் அகதிகள் முகாமில் உணவு இன்றி செத்து மடிகிறார்கள். இதில் பல லட்சம் முஸ்லிம்கள் ஐரோப்பாவிற்கு அடைக்கலம் தேடி சென்றுள்ளனர். ஆனால் ஐரோப்பாவில் பல நாடுகளில் முஸ்லிம்கள் இங்கு குடியேறிட கூடாது என்ற எதிர்ப்பு எழுந்த வண்ணம் இருக்கின்றது.

## ஹங்கேரி

ஐ.நா. சபையின் வழி ஹங்கேரியில் அகதிகள் முகாம்கள் அமைத்துத் தரப்பட்டன. ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் அங்கு குடிபெயர்ந்தார்கள். ஆனால் ஹங்கேரி மக்கள் முஸ்லிம்கள் நாட்டை விட்டு விரட்டப்படவேண்டும் என்று போராட்டங்களிலும் வன்முறைகளிலும் ஈடுபட்டுவருகிறார்கள் என்பது ஒரு புறம். மற்றொரு புறம் அமைத்துத்தரப்பட்ட அகதிகள் முகாம்களில் இது வரை உணவு மற்றும் தண்ணீர் இன்றி தவித்து வருகிறார்கள். கண்டு கொள்வார் யாருமில்லை. எனவே முஸ்லிம்கள் ஹங்கேரியை விட்டு வெளியேற முடிவு செய்து ரயில் நிலையங்களுக்கு சென்றார்கள். ஆனால் ஹங்கேரி காவல்துறை எங்கும் சென்றிட கூடாது முகாம்களுக்கு செல்லுங்கள் என்று அடாவடித்தனங்களை மேற்கொள்கிறார்கள். இதை கண்டிக்க வேண்டிய பிரதமர் விக்டர் ஓர்பன் முஸ்லிம்கள் மீது தான் கொண்டுள்ள வெறுப்புணர்வை இவ்வாறு வெளிப்படுத்தினார்.

"I think we have right to decide that we do not want a large number of Muslims in our country."

அதாவது, எங்கள் சேதத்தில் அதிகமான எண்ணிக்கையில் முஸ்லிம்கள் இருந்திட நாங்கள் விரும்பவில்லை. அதற்கான சரியான முடிவை எடுத்திட வேண்டும் என்றே எண்ணுகிறேன்.

எனவே இப்போது முஸ்லிம்கள் இப்படி கூறுகிறார்கள். "நாங்கள் ஹங்கேரியில் இத்துனை சச்சரவுகளை சந்திக்க நேரிடும் என்பதை அறிந்திருந்தால், சிரியாவை விட்டு வெளியேறியே இருக்க மாட்டோம்." ஆக மொத்தத்தில் முஸ்லிம்கள் அங்கு அகதிகளாக கூட அங்கீகரிக்கப்படவில்லை. இப்போது இந்த எல்லா எதிர்ப்புகளையும் சகித்துக் கொண்டு நின்று கொண்டிருக்கின்றார்கள். ரயில் நிலையங்களில் செல்வதற்கு வழி தெரியாமல் தங்கள் விழிகளில் கண்ணீரோடு (யாஅல்லாஹ்! எம்முடைய சமூகத்தை நீ அரவணைத்துக் கொள்).

(Source: aljazeera.com/news/2015/09/refugees/hunguary-15-0904072135726.html)

ஜெர்மனியில் முஸ்லிம்கள் இங்கு குடியெர்ந்திட கூடாது என்று பெரும் எதிர்ப்பு ஊர்வலத்தையே நடத்தினார்கள் அந்நாட்டு மக்கள். பல முறை முகாம்களில் இருக்கும் முஸ்லிம்களை தாக்கிடவும் முயற்சி செய்துள்ளனர். எனவே இப்போது முஸ்லிம்கள் கிருஸ்தவத்திற்கு மாறிவிட்டால் எந்த சச்சரவும் இருக்காது என்று கூறி இப்போது நூற்றுக்கணக்கான முஸ்லிம்களை மத மாற்றம் செய்திருக்கின்றார்கள். ஆக ஒன்று முஸ்லிம்களை அழித்திட வேண்டும் அல்லது கிருஸ்தவத்திற்கு மதமாற்றம் செய்திட வேண்டும் என்பதில் கவனமாக செயல்படுகிறார்கள்.

## நாகரீகங்களின் மோதலும் ரஷ்யாவும்

ரஷ்யா பற்றியான ஹண்டிங்டனின் பார்வை இத்தகையதாக இருந்தது:

"In Huntington's view, Russia's outdate

economy its crambling army and decreasing population left it too weak to hold its own against at booming China, a blazing Islam and a united west. He thus urged to choose closer co-operation with the confusion Muslim bloc. Huntington in turn urged west to treat Russia as a leader of the orthodox bloc and to recognise the legitimacy of Russian security interests in its southern borders. Indeed, Huntington went so far as to criticize thewest for applying double standards in Russia's case and worned against continued western interference in alien civilisation zones."

*அதாவது,*

*"ஹண்டங்டனின் பார்வையில் ரஷ்யாவின் காலாவதியான பொருளாதார கோட்பாடு, உடைந்து போன ராணுவம் மற்றும் குறைந்து வரும் மக்கள் தொகை இவை ரஷ்யாவை மிகவும் பலவீனமடைய செய்வதுடன், வளர்ந்து வரும் சீனா, பரவிவரும் இஸ்லாம், ஒருங்கிணைந்த மேற்கு உலகம் இவைகளுக்கு எதிராக தக்க வைத்து கொள்வதே கடினம் என்றொரு நிலைக்கு வந்துவிட்டது. எனவே ரஷ்யா மேற்கு உலகோடு நெருக்கமான ஒத்துழைப்பை வழங்கிட வேண்டும். குழப்பவாதிகளான முஸ்லிம்களை ஒழித்திடுவதில் ஓரணியில் நின்றிட வேண்டும்." பிறகு மேற்கு உலகிடம் ஹண்டிங்டன் இப்படி கேட்டுக் கொள்கிறார். மேற்கு உலகம் ரஷ்யாவை ஆர்தோடக்ஸ் கிருஸ்தவ கூட்டணியின் தலைமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ரஷ்யா அதன் தென் எல்லைகளில் (செசன்யாவில்) மேற்கொள்ளும் சட்டபூர்வமான பாதுகாப்பு விஷயத்தில் மேற்கு உலகின் இரட்டை நிலைபாட்டை விமர்சித்தார். இன்னும் அந்நியர்களின் (முஸ்லிம்களின்) நாகரீக மண்டலங்களில் ரஷ்யா மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் மேற்கு உலகின் தொடர் தலையீட்டை எச்சரிக்கவும் செய்தார்."*

(Source : Huntington's Clash of Civilisation and Russia)

*ஆக, இவை நமக்கு இரண்டு விஷயங்களை ளிவுபடுத்துகிறது. அது முஸ்லிம்களை ஒழித்திட வேண்டும் என்பதில் ரஷ்யாவும், மேலை நாடுகளும் ஓரணியில் தான் நிற்கின்றன என்பதையும், ரஷ்யாவின் மதமாக கிருஸ்தவம் தான் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது என்பதையும்.*

## செசன்யா சுதந்திர போர் (1994-1996) ரஷ்யாவின் அணியில் அமெரிக்கா

*ரஷ்யா தன் ஆக்கிரமிப்பில் வைத்திருந்த செசன்யாவின் சுதந்திர யுத்தத்தின் போது, ரஷ்யா வான்வழி தாக்குதல் என்ற பெயரில் பொழிந்த குண்டு மழைக்கு 80,000க்கும் மேற்பட்டோர் பலியானார்கள். 2,40,000 பேர் படுகாயமடைந்தார்கள். இந்த தகவலை தருபவர் ரஷ்யாவின் முன்னாள் பாதுகாப்பு படைத் தலைவர் அலக்ஸாண்டா I என்பவர். இதில் பாதிக்கப்பட்டவர்கள், பலியானவர்கள் அப்பாவி முஸ்லிம்கள் தாம்.*

## ஆதரவு கரம் நீட்டிய அமெரிக்கா

*ரஷ்யாவின் இந்த தீவிரவாத நடவடிக்கையை அப்போதைய அமெரிக்க அதிபர் கிளிண்டன் ஆதரிக்கவே செய்தார். மேலும் தன் செல்வாக்கின் மூலம் IMF என்ற உலக நாடுகளுக்கு கடன் தரும் நிறுவனத்தின் வழி 120 கோடி டாலர் கடன் தொகையை ரஷ்யாவிற்கு பெற்றுத் தந்தார். இந்த தொகையை "ரஷ்யாவும் பிராந்திய ஒருமைப்பாடு அழியாமற் பேணுவதற்காகவே தான் அளித்துள்ளதாக" அவர் கூறினார்.*

## நயவஞ்சகம்

*ஆனால் இந்தோனேஷியாவின் 'பிராந்திய ஒருமைப்பாடு' என்ற வகையில் மனசாட்சி இன்றியே அமெரிக்கா நடந்து கொண்டது. இந்தோனேஷியாவிற்கு IMF தரவிருந்த 420 கோடி டாலர் கடனை தரவிடாமல் தாமதப்படுத்தியது. இந்தோ னேஷியாவின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த கிழக்கு திமோரில் ஆஸ்திரேலியாவின் தலைமையில் ஐ.நா. மேற்கொண்ட ஆக்கிரமிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லையேல் கடன்*

இல்லை என அச்சுறுத்தியது. அப்போது இந்தோனேஷியாவிற்கு அதை ஏற்றுக் கொள்வதை தவிர வேறு வழியில்லை. (Source : War on Islam, Page:133)

## 9/11க்கு பின் அமெரிக்கா ரஷ்யா கூட்டணி

நாம் முன் கூறியதை போல், ரஷ்யாவை எதிர்த்து நின்ற ஆஃப்பகான் முஜாஹித்கள் பெற்ற வெற்றி முஸ்லிம் நாடுகளின் ஏற்பட்ட இஸ்லாமிய எழுச்சியின் அலை இவை எங்கே உலகத்தலைமை இஸ்லாத்தின் கீர் வந்துவிடுமோ என மேலை நாட்டவர்கள் அஞ்சினார்கள். அதன் விளைவே 9/11 தாக்குதலை அமெரிக்காவும் மேலை நாடுகளும் தாங்களே ஏற்பாடு செய்தார்கள். இது போலியான தாக்குதல் என்று ரஷ்யாவுக்கு நன்றாகவே தெரியும். காரணம் இவர்களின் இந்த திட்டத்தில் ரஷ்யாவுக்கும் பங்குண்டு. 9/11 தாக்குதல் முடிந்தவுடன் அமெரிக்க அதிபர் புஷ்-ஐ தொடர்பு கொண்டு பேசிய முதல் அயல் நாட்டு தலைவர் ரஷ்யாவின் அதிபர் லமிதிர் புடின் தான். இவர்களின் அலைபேசி உரையாடல் 40 நிமிடம் நீடித்தது. பிறகு புடின் பத்திரிக்கை களுக்கு இவ்வாறு பேட்டியளித்தார்.

"In the name of Russia, I want to say to the American people we are with you."

"ரஷ்யாவின் சார்பாக அமெரிக்க மக்களுக்கு நான் சொல்ல விரும்புவது, நாங்கள் (ரஷ்யா) உங்களோடு தான் இருக்கின்றோம்."

(Source :"Joint statement on counter terrorism the President of US and President of Russia" 21st October 2001)

## தீவிரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போர்

பிறகு இதை தொடர்ந்து தீவிரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போரில் அமெரிக்காவுடன், ரஷ்யா தான் கூட்டணி சேர்ந்து கொண்டதாக அறிவித்தது. தீவிரவாதம் என்று கூறி முஸ்லிம்கள் மீது அமெரிக்கா தொடுத்த போரில் ரஷ்யாவின் பங்களிப்பு பிரதானமானது. நேரடியான தன்னுடைய ராணுவ பங்களிப்பை தவிர்த்து எல்லா உதவிகளையும் அமெரிக்காவிற்கு செய்தது. எந்த அளவிற்கு உதவினார்கள் என்றால் அமெரிக்காவின் அத்துணை தாக்குதல் விமானங்களும் ரஷ்யாவின் வான் எல்லைக்குள் தான் தலை இறங்கின. தன்னிடம் உள்ள அத்துனை போர் தளவாடங்களையும் தந்தது. மேலும் 4,20,296 டன்களுக்கு மேற்பட்ட உணவு பொருட் களையும் 2198 டன்களுக்கு மேற்பட்ட மருத்துவ பொருட்களையும் அமெரிக்க ராணுவத்திற்கு தந்து உதவியது. சாலங் என்ற முக்கிய சுரங்கப்பாதையை ரஷ்யாவே முன் வந்து புணரமைத்து தந்தது.

(Source : 1. "A marraige of convenience : Russia and US policy" Asian Affairs an American Review 30 (Summer 2003) : 151, Rouben Azizian, 2. Michael Moran and Robert Windren "New Russia - US ware ties revealed", 3. US Central Comman "International contribution to War on Terrorism")

## சிரியாவில் ரஷ்யா தொடுப்பது புனிதப் போரல்ல சிலுவைப்போரே!

9/11 தாக்குதலுக்கு பிறகு ரஷ்ய - அமெரிக்காவின் பனிப்போர் சாயம் வெளுத்தது. இப்போது மீண்டும் ஒரு நாடகமாட மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளில் முயல்கிறார்கள்.

சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தின் தொடக்கத்தில் இருந்தே ரஷ்யா கிளர்ச்சியாளர்களை எதிர்த்து தன் ராணுவத்தை கொண்டு தாக்குதலை நடத்தி வந்தது. இப்போது தன்னுடைய தாக்குதலை தீவிரப்படுத்தி தன் அதிகார பூர்வமான போரை பகிரங்கப்படுத்தியுள்ளது ரஷ்யா. அதை ஆற்றல்மிக்க ரஷ்ய ஆர்தோடக்ஸ் தேவாலயத்தின் தலைவர் பாட்ரியர்ச் கிரில் இப்படி கூறுகிறார்,

"Russia is waging a 'Holy War' in Syria to protect innocent Christians against the tyranni of

terrorism."

“ரஷ்யா இப்போது சிரியாவில் அப்பாவி கிருஸ்தவர்களை பாதுகாத்திட கொடுங்கோல் ஆளுமையின் பயங்கரவாதத் திற்கு எதிராக ‘புனிதப் போர்’ தாம் தொடுத்து வருகிறது.”

அதை அவர் கூறிடும் போது ரஷ்யாவின் அதிபர் புடின் அருகில் தான் அமர்ந்திருந்தார். இதை ரஷ்யா ஆர்தோடக்ஸ் தேவலாயத்தின் செய்தி தொடர்பாளர் ஒருபடி மேமேல போய் இப்படி கூறினார்.

"Fight against terrorism is holy struggle and today our country is perhaps most active force in the world to combat terrorism."

“பயங்கரவாதத்திற்கு எதிராக சண்டையிடுவதும் புனித போர்தாம். இன்று நம்முடைய தேசம் தான் பயங்கரவாதத்தை எதிர்த்திடுவதில் மிகவும் சுறுசுறுப்பான படையாக திகழ்கிறது.”

ஆக இவை ரஷ்யாவின் அரசியலில் கிருஸ்தவ தேவலாயங்கள் செலுத்திடும் ஆதிக்கத்தை தெளிவுபடுத்துகிறது. எப்படி மேலை நாடுகளின் மதமாக கிருஸ்தவம் இருக்கின்றதோ அதை போன்று ரஷ்யாவின் மதமும் கிருஸ்தவம் தான என்பதை புடின் பல முறை ஒத்துக் கொண்டுள்ளார். எனவே தான் பத்திரிக்கைகளும் வரலாற்று ஆசிரியர்களும் ரஷ்யா ‘புனிதபோர்’ என்று புணைந்துரைக் கின்றது. உண்மையில் இத புனித போரல்ல ‘சிலுவைப் போர்’ தான் என்கிறார்கள்.

(Source : www.middleeastmonitor.com/news/middle-east 2/407-russian-churches-declaration-of-holywar-in-syria-sparks-calls-for-jihad)

2. A “Risky West Ward Turn”? Putin 9/11 script and ordinary Russians.

3. Till Daughtery, “9/11 a “Turning Point” for Putin 10 September 2002”

4. Shevtesva, Putin's Russia Page No. 152-154, 207

5. Thomas Cuitnington “The other Allies: Russia, India and Afghanistan's united front; ament History 101 Gammon)”

## ரஷ்யாவின் வலையில் ஈரான் மற்றும் ஹிஸ்புல்லாஹ்

பெருபான்மை சன்னி முஸ்லிம்களால் சிறுபான்மை ஷியாக்களுக்கு ஆபத்த என்று ரஷ்யா விரித்த வலையில் ஈரானும், ஹிஸ்புல்லாவும் பலியானது. ரஷ்யா ஷியாக்களை பாதுகாக்கிறது என்றொரு மாயை-ஐ ஏற்படுத்துகிறார்கள். Economist என்ற ஆங்கில பத்திரிக்கை இப்படி கூறியது, “Putin : the chapmion of Shias”. அதாவது, “புடின்: ஷியாக்களுக்கு பரிந்து போராடுபவர்”. இவர்களின் இந்த மாய வலையில் மயங்கி இஸ்லாத்தை முன்நிறுத்தி போராடும் முஜாஹித்களோடு ஈரானும் ஹிஸ்புல்லாவும் போராடுவது பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கின்றது.

இஃவானுல் முஸ்லிமீன் கண்டனம்

ஹிஸ்புல்லாவின் தலைவர் ஹஸன் நஸ்நல்லாஹ் தொலைகாட்சியின் வழி “சிரியாவின் யுத்தத்தில் நாம் வெற்றி பெற்றிட வேண்டும்” என்று எடுத்த சபதத்திற்கு பிறகு இஃவானுல் முஸ்லிமீன் முழு கண்டனத்தை யும் தன்னடைய அதிகாரபூர்வமான இணைய தளத்தில் பின் வருமாறு வெளியிட்டுள்ளது.

"Hezboolah lost their status in the hearts of Arab and Muslim people."

ஹிஸ்புல்லாஹ் அரபு மற்றும் முஸ்லிம்களின் இதயத்தில் இருந்த தன் இடத்தை இழந்துவிட்டது.

பஷர் - அல் - ஆசாத்தின் அரசு லட்சக்கணக்கான மக்களை படுகொலை செய்துள்ளது என்று குற்றம் சாட்டியதுடன் இஸ்வானுல் முஸ்லிமீன் சிரியா நாட்டு மகக்ளின் போராட்டத்திற்கு ஆதரவளிக்கின்றது. சிரிய மக்களுக்கு எதிராக கட்டவிழத்து விடப்படும் கொடுமைகளுக்கு இஸ்லாமிய அரசால் மட்டுமே சரியான

அரசியல் நிலைப்பாட்டை எடுத்திட முடியும் என கூறியிருந்தது.

இஃவானுல் முஸ்லிம்களின் முக்கிய அல் ஜெசிராவிற்கு தந்த பேட்டியில் இப்படி கூறினார்,

“Many have been confused about the brotherhoods position towards Iran, even have humiliated us. Now we say loud and clear, Muslim brotherhood’s strongly opposes Iran’s expansionist project in the region. This is the definite answer to the question about Iran policies.”

“பலரும் ஈரானின் விஷயத்தில் இஃவானுல் முஸ்லிமீன் நிலைபாடு என்ன வென்பதில் குழப்பமடைகிறார்கள். நாம் அவமானப்படுத்தப்பட்ட பிறகும் தான். இப்போது நாம் தெளிவாக உரக்கச் சொல்கிறோம் இஃவானுல் முஸ்லிமீன் ஈரானின் விரிவாக்க திட்டத்தை கடுமையாக எதிர்க்கிறது. இதுவே ஈரானின் கொள்கைகள் பற்றியான கேள்விக்கு திட்டவட்டமான பதில்.”

(Source : Iran and Muslim Brotherhood - www.internationalpolicydigest.org/2015/07/05/iran-and-the-muslimbrotherhood.

2. www.globalwatch.com/2013/06/03/egyptian-muslim-brotherhood-condemns-iran-hezbollah-syrian-internvention)

## டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி

டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி தோஹாவில் அமைந்துள்ள உமர்-அல்-கத்தாப் பள்ளிவாயலில் உரை நிகழ்த்தும் போது, உலகில் வாழும் ஒவ்வொரு முஸ்லிமும் சிரியாவின் யுத்தத்தில் கலந்து கொள்வதற்கு ராணுவப் பயிற்சிகள் எடுத்து தயாராக வைத்துக் கொள்ள வேண்டும் என்று பணித்தார்.

மேலும் லெபனானின் எல்லையை ஒட்டியுள்ள குஸைர் என்ற கிராமத்தில் 17 நாள் ஹிஸ்புல்லா தொடுத்த தாக்குதல் முஜாஹித்களின் கட்டுப்பாட்டில் இருந்த அந்த நகரை ஆசாத்தின் அரசு படை மீண்டும் கைபற்றுவதற்கு பெரும் பங்காற்றியது. ஹிஸ்புல்லாவின் இந்த செயலை யூசுஃப் - அல்-கர்ளாவி அவர்கள் வண்மையாக கண்டித்ததோடு மட்டுமல்லாமல் ஹிஸ்புல் லாஹ் (அல்லாஹ்வின் அணி என்ற அர்த்தம்) வை ஹிஸ்புஷ்ஷைதான் (சாத்தானின் அணி) என்றே அழைத்தார்.

(Source : www.resworld.org/docid/51bef574.html)

# வாழ்வின் வழிகாட்டி!

மேலைநாடுகளில் ஓர் வேகமான வளர்ச்சி. அது திருமணச் சிதைவு. குடும்ப வாழ்க்கையில் குளறுபடி. ஆக கணவனும், மனைவியும் விஞ்சிக் கொண்டு தனித்தனியாக வாழும் கொடுமை.

விவாகரத்துக்கள் பல்கிப் பெருகி விட்டன. காலையில் திருமணம் மாலையில் ரத்து என வேகமாக மேலைநாடுகள் இதில் முன்னேறின.

அந்தக் கல்வியையே ஆண்டாண்டு காலமாகக் கற்றதாலும் ஊடகங்களின் படையெடுப்பு, சினிமாக்கள், சுவரொட்டிகள் இவற்றில் பொங்கி வழியும் ஆபாசம் இவையெல்லாம் ஆட்டைக் கடித்த மாட்டைக் கடித்து இறுதியில் முஸ்லிம்கள் குடும்ப அமைப்பையும் குலைத்து கொண்டே வருகின்றது உண்மை.

இது அந்தந்த வீட்டின் பிரச்னை என இருக்க விரும்பவில்லை நம் இமாம்கள். இஸ்லாமிய குடும்ப அமைப்பில் இவை நடக்கக் கூடாது என விடாமல் தடுத்திட என்ன செய்திட வேண்டும் என்ற ஆலோசித்திருக்கின்றார்கள். முடிவில் ஓர் முறையான பாடத்திட்டத்தின் கீழ் மண உறவில் ஈடுபட இருப்பவர்களைப் பயிற்றுவிக்க ஓர் பாடத்திட்டத்தை உருவாக்கி இருக்கின்றார்கள். அதனை புத்தக வடிவாகவும் தந்திருக்கின்றார்கள்.

இது குறித்த அறிமுகக் கூட்டம் ஒன்று சென்னை பிரிஸ்டடன் கல்லூரியில் நடைபெற்றது.

ஆலோசனையில் சமுதாய ஆர்வலர்கள் கலந்து கொண்டார்கள். இவர்களுள் விருந்து வருகை தந்திருந்த இமாம் அவர்கள் மொத்த அக்கறையோடும் உணர்வு பொங்கவும் நறுக்கென்று ஓர் கருத்தைச் சொன்னார்கள். அது,

நன்றாக அலைந்து தேடிப் மாப் பிள்ளைப் பார்க்கின்றார்கள் தேர்ந்தெடுக் கின்றார்கள். சின்ன விஷயத்திற்காக மாப்பிள்ளைவிடமிருந்து மணவிலக்கு கோரி மூச்சைப் உடைக்கின்றார்கள். மணவிலக்கு முறிந்த பின் ஏதாவது ஒரு மாப்பிள்ளை என்ன வடிவில் கிடைத்தாலும் போதும் என அலைகின்றார்கள். இதற்கு அந்த மாப்பிள்ளையோடு வாழ்ந்திட முயற்சிக்கலாம். விட்டுக் கொடுக்க வேண்டிய இடத்தில் விட்டுக் கொடுத்து வாழ முயற்சி செய்திருக்கலாம். இதனால் எண்ணற்ற பிரச்னையிலிருந்து மணமக்களையும், பெற்றோர்களையும் காப்பாற்றிடலாம்.

இது எல்லோருக்கும் நறுக்கெனப்பட்டது. குழுமி இருந்த ஊடகக்காரர்களிடம் இந்த முயற்சியை முஹல்லா தோறும் கொண்டு சென்றிடவேண்டும் என பாடத்திட்ட குழுவினர் கேட்டுக் கொண்டார்கள். நாமும் இதைப் படிக்கும் வாசகர்கள் அதைச் செய்யுங்கள் மணவிலக்குகளைக் குறைப்போம்.

பாடத்திட்டத்தில் கொண்டு இணைத்திட வேண்டியவை பற்றிய ஆலோசனைகளை அன்புடன் ஏற்றுக் கொண்டோர்.

இவர்களுக்கு எல்லாவிதமான ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றது. செய்வோம் முயற்சி வெற்றி பெற துஆ செய்வோம். உங்கள் முஹல்லாவிற்கு இதனை கொண்டு வந்திட தொடர்பு கொள்ளுங்கள் தொலை பேசி எண் :

**இப்னுதவூத்**
**முஜிபுர் ரஹ்மான்**
**ந.நீ.**

கடந்த 6.9.2015 அன்று திருப்பூரில் நடந்தட 'மௌனத்தின் சாட்சியங்கள்' நூல் அறிமுக நிகழ்வை அக்டோபர் மாத வைகறை இதழில் வெளியிட்டு இருந்தோம். அதற்கு பதில் விமர்சனத்தை நாவலாசிரியர் சம்சுதீன் ஹீரா வைகறை வெளிச்சத்துக்கு அனுப்பியிருந்தார்.

அதில் பல கேள்விகளை தொடுத்திருந்தார். அதற்கான பதில்கள் இதோ:

2006 ஜுலையில் கோவையில் உளவுத்துறை குண்டு வைக்க சதித்திட்டம் போடப்பட்டு அதை முஸ்லிம்கள் மேல் சுமத்த காத்திருந்தனர். அல்லாஹ்வின் அருளால் 'மனித நீதி பாசறை' அதை முறியடித்தது. 'மௌனத்தின் சாட்சியங்கள்' கோவை குண்டு வெடிப்பை மையமாகக் கொண்டு முஸ்லிம் கள் குண்டு வெடிப்பை நிகழ்த்தியதாக கூறுகிறது. நாவலாசிரியர் நமது கேள்வியை புரிந்து கொள்ளவே இல்லை. 2006ல் குண்டு வைத்திருந்தால் பழி முஸ்லிம்கள் மீதே விழுந்திருக்கும் . முஸ்லிம்களே குற்றம் சாட்டப்பட்டிருப்பர். முஸ்லிம்களே கைதும் செய்யப்பட்டிருப்பர். 1998 பிப்ரவரியில் நடந்த கோவை குண்டு வெடிப்பை முஸ்லிம்களே செய்ததாக பதிவு செய்கிறது நாவல். அது போலவே தானே இதிலம் பழியை சுமத்திருப்பீர்கள். கோவை குண்டு வெடிப்பில் பல்வேறு கரங்கள் உள்ளதை குறித்து சிந்திக்கவே இல்லையே என்பதே நமது கேள்வி.

அடுத்த கேள்வி யாசரின் மனநிலை குறித்தானது. நாவலாசிரியர்கள் உண்மை கதாபாத்திரத்தையே சில கற்பனைகளை சேர்ப்பர். ஆனால் இந்த நாவலின் முந்திய கதாபாத்திரமான யாசர் குண்டு வெடிப்பில் கைதாகியுள்ள அப்பாவி. நிஜமாகவும் நிறைய அப்பாவிகளே இந்த குண்டுவெடிப்பில் இன்றும் சிறையில் உள்ளனர். அந்த சகோதரர்களை அவமதிப்பது போலவே உள்ளது யாசரின் பாத்திரம். இதைத் தான் மேடையிலும் குறிப்பிட்டேன்.

அடுத்ததாக கம்யூனிசமே தீர்வு என குறிப்பிடவில்லை என்கிறார் நாவலாசிரியர். மதவாதத்தால் மோதல் நடந்ததாக பதிவு செய்து விட்டு இதற்கு தீர்வாக கம்யூனிசமே உள்ளது என்பதாக நேரடியாகவும், இலைமறை காயாகவும் பல இடத்தில் கோடிட்டு காட்டுகிறார். வைகறை வெளிச்சத்துகரு அனுப்பிய பதிலில் இதை மார்க்சிய கண்ணோட்டத்தில் ஆய்வு செய்ததாக கூறியுள்ளார். சம்பவங்களின் யதார்த்த அடிப்படையில் ஆய்வு செய்யாமல் இவர் உள்வாங்கிய கருத்தியலின் அடிப்படையில் எப்படி ஆய்வு செய்ய முடியும்? மார்க்கசிய கண்ணோட்டமே முழுக்க முழுக்க தவறானதும் யதார்த்ததை புரிந்து கொள்ளாததும் தானே?

அடுத்த கேள்வியில் இஸ்லாம் எங்கே ஆட்சி செய்தது என்று கேள்வியை எழுப்பியுள்ளார். வரலாறு அதிகம் அறியாததாலோ அல்லது வேண்டுமென்றே மறைப்பதாலோ இக் கேள்வி என புரியவில்லை. முகம்மது நபி(ஸல்) அவர்களால் மதீனாவில் நிறுவப்பட்ட இஸ்லாமிய அரசானது அவரின் மறைவுக்கு பின்னரும் ரோம, பாரசீகங்களையும், ஐரோப்பா, ஆப்பிரிக்கா ஆசியா போன்ற கண்டங்களின் பெரும் பகுதியையும் அதில் வாழ்ந்த மக்களையும் எவ்வாறு இனத்திற்கும் தேசிய பொருளாதார . . . . . . நடத்தியதையும் பல புத்தகங்களாக வெளிவந்து விட்டன. சில பக்க மறுப்புகளில்

புத்தகங்களை இன்ஷா அல்லாஹ் தருகின்றோம். படித்து பார்ககவும். உற்பத்தி முறை மட்டுமே ஆட்சி உட்பட அனைதிற்கும் காரணம் போன்றவை மிகவும் தவறான புரிதல்களே. அப்படியெனில் இந்தியாவில் எந்த உற்பத்தி முறையில் அடிப்படையில் சமூகமும் ஆட்சியும் உள்ளது? அப்படியெனில் இந்தியாவில் அரசே இல்லை என்று வருகிறாரா?

அடுத்த கேள்வியில் இஸ்லாம் எங்கே வறுமையை ஒழித்தது? என்கிறார். உமர் பின்

அப்துல் அஜீஸ் ஆட்சியின் போதும் ஜகாத்தை வசூலித்து அதை கொடுப்பதற்கு தேடியும் ஆள் கிடைக்கவில்லை.

இஸ்லாம் வறுமையை ஒழிந்திருந்தால் ஜகாத் என்ற முறை தேவையில்லாமல் போயிருக்குமே என்ற வினாவை எழுப்பியுள்ளார். இது இஸ்லாம் மற்றும் அரசு போன்றவைகளை இன்னும் சரியாக புரிந்து கொள்ளாததினாலேயே வந்த கேள்வியாகும். ஜகாத் என்பது பிச்சை அல்ல. அரசுக்கு கட்டாயம் செலுத்தியே ஆக வேண்டிய வரி. அந்த வரியின் வழியே இஸ்லாமிய அரசானது மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றும். அதே சமயம் இஸ்லாம் அல்லாத ஆட்சியின் போதும் இன்று ஜனநாயக என்ற பெயரில் நடக்கும் ஆட்சியை போன்றோ வரியை அதிகமாக்கி மக்களை பிழித்தெடுக்கவில்லை. வெறும் இரண்டரை சதம் தான். அதுவும் பொருளாதாரத்தில் வலிமையானவர்கள் மட்டும் தான் என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும். நாவலாசிரியர்ட நமது வேர்கள் பதிப்பகத்தின் வெளியீடான "இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா?" என்ற புத்தகத்தை வாங்கி சென்றுள்ளார். அதில் "அஸ் பைசாத் ஏன்" என்ற தலைப்பின் கீழ் உள்ள பகுதியை முழுமையாக படித்தால் ஜகாத் ஏன் என்பது விளங்கும்.

அடுத்தாக கம்யூனிச ஆட்சி எங்கு நடந்தது என்கிறார்? இவர் ஒத்துக் கொண்டாலும் ஒத்துக் கொள்ளாவிட்டாலும் சோவியத் ரஷ்யா, சீனா, யுகோஸ்லோவியா, கியூபா இன்னும் பிற தென்னமரிக்க நாடுகளில் கம்யூனிச ஆட்சியை கொண்டு வர பாடுபட்டவர்களும் இவைகளை கம்யூனிச ஆட்சி தான் என்று தெளிவாக குறிப்பிட்டார்கள். அதிலும் கம்யூனிசத்தின் தலைமைப் பீடமாக இருந்த சோவியத் யூனியனின் அப்போததை கம்யூனிசக் கட்சியின் தலைவராக இருந்த கோர்ப்பசேவ் அவர்கள் இனி கம்யூனிசம் எடுபடாது என்று புதிதாக ஒருக் கொள்கையை பிரகடனப் படுத்தினார்கள். அதன் பெயர் பிரஸ்தோரக்கா (Perestvoika).

மேற்கு வங்கத்தில் நீண்ட காலம் ஆட்சி செய்த ஜோதிபாசு அவர்கள் கம்யூனிசம் இனி கதைக்குதவாது முதலீடுகள் இல்லாமல் இனி வாழ முடியாது என்றார்.

இந்த வகையில் கம்யூனிசம் ஆண்டதற்கும் வீழ்ந்ததற்கும் பல உதாரணங்கள் இருக்கிறபோது கம்யூனிச ஆட்சியே இதுவரை ஆதிப் பொதுபுடமை சமூகம் தவிர்த்து நடக்கவே இல்லை என்பது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதாகும்.

அது மட்டுமல்லாது ஆதி சமூகத்தில் கம்யூனிச ஆட்சி நடந்ததாக நினைக்கிறார். இது முழுக்க முழுக்க கற்பனையே. எந்த ஆதாரமான தகவல்களும் கிடையாது.

மூந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் கூடியிருந்த அரங்கில் நாவலாசிரியர் பேசியதை மாற்றி எழுதியுள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார். முதலில் அந்த அரங்கில் 300 இருக்கைகள் போடப்படவேயில்லை. வீடியோ இருந்தால் எடுதது பார்க்கவும். கூட்டத்திற்கு வந்தவர்களின் எண்ணிக்கையை நாம் பேச விரும்பவில்லை. ஆனால் எதை நாம் மாற்றப் பேசினோம் என்று கூறினாரோ அதையே பதிவுடனும் குறிப்பிட்டு நாம் மாற்றிப் பேசவில்லை என்பதை நிரூபித்துவிட்டார்.

இஸ்லாமிய ஆட்சியே அனைத்திற்குமான தீர்வு என்பதில் தனக்கு நம்பிக்கையில்லை என்கிறார் நூலாசிரியர். இதற்கு காரணம் இஸ்லாமிய ஆட்சி குறித்து எந்த ஒரு அறிவும் இல்லாதிருப்பதே காரணமாகும். இஸ்லாமிய ஆட்சியில் மட்டுமே அனைத்திற்கும் தீர்வு என்று நிரூபிக்க இன்ஷா அல்லாஹ் தயாராகவே இருக்கிறோம். மீண்டும் சொல்கிறேன் இஸ்லாமிய ஆட்சிக் குறித்த வரலாறுகளை தெளிவாக படிக்கவும். இஸ்லாமிய ஆட்சி தீர்வு என நாம் கூறியதற்கு அவர் கூறிய உதாரணம் வெகுளித்தனமாக உள்ளது.

*கொள்ளு தாத்தா மாட்டு வண்டியில் பயணிக்க வேண்டுமா என்கிறார்? இது ராக்கெட்டுகளின் காலம் என்கிறார். இது தொழில்நுட்ப வளர்ச்சியே மற்றபடி எதுவும் மாறவுமில்லை மாறவும் செய்யாது. நமது கொள்ளுத்தாத்தா வாய் வழியே தான் உணவு உண்டார். ஆகவே நான் மூக்கில் உண்பேன் என்பது முட்டாள்தனமே. இறைவன் படைத்த அடிப்படை விஷயங்களை மாற்றவும் முடியாது. ஆகவே மனிதனுக்கு என்ன தேவை என்பதை படைத்தவன் அறிந்து அதற்கான சட்ட திட்டங்களை எப்போதும் பொருந்துமாறு தந்துள்ளார்கள். அதுவே இஸ்லாமிய சட்டதிட்டம். இதன் மூலமே வெற்றியுண்டு. மற்ற கற்பனைக் கொள்கைகள் எல்லாம் தோல்வி கண்டு மாறிவருவது. இதையே தெளிவாகக் காட்டுகிறது. ஏங்கல்1 எழுதிய புத்தகத்தை சகோதரர் சம்சுதீன் ஹீரா படிக்குமாறு பரிந்துரைத்துள்ளார். நன்றி. அனைத்துமே உற்பத்தியின் அடிப்படையிலானது என்ற தவறான பார்வையை ஆய்வு செய்யுமாறு நாவலாசிரியரை கேட்டுக் கொள்கிறேன்.*

**இப்படிக்கு**
**காதர் மைதீன்**

# கட்டாயமதமாற்றத் தடைச் சட்டம்!

தீண்டாமையை ஒழிக்க முடியாதவர்கள், விதவைக்கு மறுவாழ்வு அளிக்க முடியாதவர்கள், வாழ்வுரிமை அளிக்க முடியாதவர்கள், சிறுபான்மையினர், பெரும்பான்மையினராக மாறிவிடுவார்கள் என்ற அச்ச நிலையின் காரணமாக கொண்டு வரப்பட்ட சட்டம்தான் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் 2002 (செப்டம்பர்).

இந்த மதமாற்றத் தடைச் சட்டத்தைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் நாம் சில விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டும். இந்த சட்டம் இந்தியாவில் 09,2002ல் தான் முதன் முதலாக பிரகடனப்படுத்தப்பட்டது என்பது இல்லை. ஒரிசா மாநிலத்தில் ஒரிசா மத சுதந்திரச் சட்டம் 1967 இதனைத் தொடர்ந்து 1968, மத்திய பிரதேசத்தில் மத்திய பிரதேச சுகாதாத்திர ஆதினியம் 27ல் 1968 கொண்டு வரப்பட்டது.

இந்தச் சட்டம் கொண்டு வர மிக முக்கிய காரணம் என்று சொல்லப்படுவது,

2002 ஜெயலலிதா ஆட்சி காலத்தில் புகார் அதிகம்.

1. சட்டமன்றத்தில் விவாதித்த போது ஓர் புகார் கூட ஆதாரமாக எடுத்து வைக்க முடியவில்லை.

2. அவர் சொன்னது, மதுரையில் மதமாற்றுவதற்காக ரூ. 2000 கொடுத்து தாழ்த்தப்பட்டவர்கள், கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றினார்கள் என்று குற்றம் சாட்டினார்கள்.

3. ஆனால், ஆதாரப்பூர்வமாக எதையும் தர முடியவில்லை. ஆனால், எதற்கு மாறினார்கள் என்பது பிறகு பார்ப்போம். அதற்கு முன்பாக இந்தச் சட்டம் எதை குறை கூறுகிறது என்று பார்ப்போம்.

4. கீழ்கண்ட மூன்று விஷயங்களை அரசாங்கத்தில் நிரூபிக்கவில்லை என்றால் மூன்று ஆண்டுகள் காவல் மற்றும் ரூபாய் 50,000 முதல் 1 லட்சம் வரை அபராதம்.

**அந்த மூன்று விஷயங்கள்**

1. ஆசை காட்தல்,

2. மதமாற்ற முயற்சி செய்தல்,

3. தகவல் கொடுக்க வேண்டும்.

**ஆசை காட்டுதல்:**

உனக்கு சம உரிமை கொடுக்கப்படும். இறைவனை வணங்கும் பள்ளிவாசல்களிலும், திருமணத்திலும், எல்லாச் சுக - துக்க காரியத்திலம் உனக்கு சம உரிமை அளிக்கப்படும் என்று கூறுவதும் ஆசை காட்டுதலில் அடங்கும். உனக்கு சொர்க்கம் உண்டு என்று கூறினாலும் அதவும் ஆசை காட்டுதலில் அடங்கும்.

**மதமாற்ற முயற்சி செய்தல்:**

உண்மையான மார்க்கத்தை எடுத்துச் சொல்வதற்காக தாஃவா Programme வைத்தாலும் 'மதமாற்ற முயற்சி செய்தல்' என்று கூறி பிரச்சனை செய்ய இயலும்.

தனி ஒரு மனிதனிடம் தாஃவா செய்தாலோ, அல்லது அவர் இஸ்லாத்தை பற்றி தெரிந்து கொள்வதற்கு கேட்டாலோ மதமாற்ற முயற்சி செய்தல் என பிரச்சனை செய்யலாம். உண்மை இறைவனை எடுத்துச் சொன்னாலும் மதமாற்ற முயற்சி என பிரச்சனை செய்யலாம்.

**தகவல் கொடுக்க வேண்டும் ( தாசில்தார் அல்லது நீதிபதிக்கு)**

1. தகவல் கொடுத்தாலும் சரியான முறையில் தகவல் வரவில்லை என்று கூறி மதம் மாறியவர்களை பிரச்சனைக்கு உள்ளாக்கலாம்.

2. எத்தனை பேர் எந்தெந்த ஊர், யார், யார் தாஃவா செய்கிறார்கள் என்று இதன் மூலம் அறிந்து, இதைப்போல் பல சட்டங்களைக் கொண்டு வந்தும் அவர்களை பிரச்சனைக்கு உள்ளாக்கியும் தாஃவாக்களை நடக்க முடியாமல் செய்யலாம்.

**இது போன்ற பிரச்சனைகள் முஸ்லிம்களுக்கு பெரிது இல்லை**

இந்தியாவை இந்து ராஷ்டிராவாக மாற்றுவதற்காக இதுபோன்ற பல சட்டங்களை (தடா போன்ற) இயற்றியும், அகற்றியும் இருக்கிறார்கள்.

முஸ்லிம்களுக்கு (International Law) அல்லாஹ் கொடுத்த குர்ஆனிய சட்டத்தை (ஷரியத் சட்டம்) பின்தொடர்ந்துட செல்லும் வரைக்கும் இது போன்ற (State Level Law) எத்தனை வந்தாலும் பிரச்சனை இல்லை.

இன்ஷா அல்லாஹ், இதற்கான தாரூல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் அப்போது நிறுவி, நடத்தி வந்த விடியல் வெள்ளி பத்திரிக்கையில் இதைப் போன்ற பிரச்சனைகள் வரும் போது எங்களை தொடர்பு கொள்ளுங்கள், மனித நீதி பாசறையில் சட்ட உதவிக்குழு தயாராக இருக்கிறது என்று கூறியிருந்தோம். மேலும் விவரங்களுக்கு விடியல் வெள்ளி (நவம்பர் 2002). அதே உதவி இப்போதும் தரப்படும். மற்றும் மாற்றுமத சகோதரர்களிடம் எப்படி தாஃவா செய்வத என்றும், தேவைப்படும் நபர்களுக்கு சொல்லி தரப்படும். தேவைக்கு அந்தந்த ஊர்களில் இருக்கும் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் உறுப்பினர்களை அணுகவும்.

**ஏன் மதம் மாறுகிறார்கள்?**

தீண்டாமையின் கொடுமை காரணங்களினாலும், தீண்டாமை, பார்க்காமை, பழகாமை கொடுமைகளின் காரணமாகவே தவிர பணத்திற்காகவோ கட்டாயப்படுத்தியோ, ஆசைக் காட்டுதலின் காரணமாக மாறுதல் இல்லை.

உதாரணத்திற்கு காஞ்சிபுரம் அருகில் உள்ள கூத்தரம்பாக்கம் கிராமத்தில் 50 தலித் குடும்பத்தினர்கள் இஸ்லாத்திற்கு மாறி னார்கள். காணரம், தங்கள் ஊரில் இருக்கும் மாரியம்மன் கோவில் தேர் தங்களின் தெருவிற்கு வருவதற்காக 1979 முதல் பல வருடங்கள் போராடி வந்தும், தேர் தெருவுக்குள் வரவில்லை. இந்த பிரச்சனையை சமாளிப்பதற்காக அப்போது அமைச்சராக இருந்த எஸ்.டி. சோமசுந்தரம் உங்கள் தெருவிற்கு ஒரு கோயில் கட்டித் தருவதாக கூறினார். அந்த கிராமத்தின் மக்கள் எங்களிடம் காசு இல்லாமல் இல்லை, கோவில் தேவை என்றால் நாங்களே கட்டிக் கொள்வோம் என்று கூறினார்கள். அவர்கள் எதிர்பார்த்தது சம உரிமையே.

**(ஆதாரம் : மதமாற்றம் தடைச் சட்டம் தமிழ்நாட்டை பார்ப்பன நாடாக்கும் சதியே. (வெளியிடுவார் : மக்கள் கலை இலக்கியக் கழகம்)**

திருவிதாங்கூர் - அதாவது இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் 1800களில் நாடார் சமூகத்தை சேர்ந்தவர்கள் சாணார்கள் என அழைக்கப்பட்டார்கள். அவர்களுக்கு சமூகக் கட்டுப்பாடுகள் இருந்தன. ஆண்கள் மீசை வளர்க்கக் கூடாது. தலைப்பாகை கட்டக் கூடாது. பெண்கள் இடுப்புக்கு மேல் ஆடை அணியக் கூடாது. பெண்களுக்கு மார்பகங்களுக்கு கூட வரி கட்டாவிட்டால் பெண்களுடைய மார்பகங்கள் அறுக்கப் பட்டன. பெண்கள் இடுப்பில் தண்ணீல் எடுக்கக் கூடாது. தலையில் தான் எடுக்கணும். பசு வளர்க்கக் கூடாது. ஓடு வேய்ந்த வீடுகள் கட்டக்கூடாது. தொழிற்சாலைகள், பாலங்கள், கிணறுகள் உபயோகிக்கக் கூடாது. உயர் சாதிகள் இருக்கும் சாலை வழிகளில் போகக் கூடாது. இதுபோன்ற தீண்டாமை

யின் காரணமாகத் தான் மதம் மாறினார்கள். பொருளாதாரத் திற்காக மாறவில்லை. சமூக ரீதியில் தாழ்த்தப்பட்ட காரணத்திற்காக மாறினார்கள்.

## நாடார்கள்

ஏனென்றால், அன்றைய சூழலில் அங்கு பொருளாதாரத்தில் மேம்பட்டு இருந்த நாஞ்சி நாட்டு வெள்ளாளர் போன்ற உயர் சாதி இந்துக்களைப் போன்று தங்களுக்கும் பொருளாதார ரீதியாக மேம்பட்டு இருந்தனர். இன்னும் அவர்களுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்படும் இடஒதுக்கீடு போன்ற சலுகைகளை பயன்படுத்தி அவர்கள் பொருளாதாரத்தில் மேம்படலாம். ஆனால் அதையும் உதரி தள்ளிவிட்டு உண்மை மார்க்கத்திற்கு வருகிறார்கள். டி.எம். உமர் பாஃரூக் (முன்னாள் டி.எம். மணி) போன்ற பெரிய சமுதாய தலைவர்கள் சொன்ன வார்த்தைகளே இதற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைகிறது. ஊனமுற்றோர்களுக்காக நாற்காலி கிடைக்கும் என்று என்னை நானே ஊனப்படுத்திக் கொள்ளலாமா? அதாவது அதன் அர்த்தம் இன்றும் டி.எஸ்.பி. விஷ்ணுபிரியா போன்றவர்கள் உயர்ந்த பதவியில் இருந்தாலும் அவர்களை சாதிய கொடுமைகளுக்கு ஆளாக்கி அவர்களை தற்கொலை செய்ய வைக்கிறார்கள். இதை போன்ற கொடுமைகளை கண்ட பெரியார், அம்பேத்கார் போன்ற தலைவர்கள் சொன்ன அறிவுரைகளை சிந்தித்து, உண்மையான மதத்தை ஆராய்ந்து மதம் மாறுகிறார்களே தவிர, வேறு எந்த காரணமும் இல்லை.

மதமாற்றம் என்பது பொருளாதாரத் தின் அடிப்படையாக நடைபெறுவது என்பது இதன் மூலம் அடிபட்டு போகிறது.

## திப்பு சுல்தான் நடவடிக்கை எடுத்தார்

அவர் திருவதாங்கூர் அரசருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். நான் ஊர் வழியாகச் சென்றபோது அங்குள்ள பெண்கள் இடுப்புக்கு மேல் ஆடை அணியாமல் இருந்ததைப் பார்த்தேன். அவர்கள் என்ன காரணத்தால் ஆடை அணியவில்லை.

ஒருவேளை வறுமை காரணமாக ஆடை அணியவில்லை என்றால் அவர் களுடைய வருமானத்தை மேம்படுத்தி வழி செய்யுங்கள்.

அல்லது சமூகக் கட்டுப்பாடுகள் காரணமாக அணியவில்லை என்றால், இத்தனை நாட்களுக்குள் ஒரு தேதியைக் குறிப்பிட்டு அதைச் சரிசெய்து ஆடை அணியச் செய்ய வேண்டும். இல்லை யென்றால் நான் உங்கள் மீது போர் தொடுத்து அந்த மக்களை மாற்றுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

1899 சிவகாசியில் நாடார்கள் கோவிலுக்குள் நுழைய முயன்ற போது உயர்சாதி இந்துக்களால் அடித்து கடுமையாக தாக்கப்பட்டு கடுமையாக பாதிக்கப்பட்டனர். இது சம்பந்தமாக இங்கிலாந்தில் உள்ள பிரைவி கவுன்சில் என்ற மன்னர் மாமன்றத்தில் வழக்கு நடந்தது. இவர்கள் கோவிலுக்குள் நுழையக் கூடாது என்றே அதிலும் தீர்ப்பு வந்தது. இதன் பாதிப்பால் திருநெல்வேலியில் 3000 நாடார்கள் இஸ்லாத்தை தழுவினர்.

திண்டுக்கல்லில் சிறுநீர் குடிக்க வைத்தது, மலம் திண்ண வைத்தது போன்ற கொடுமையாலும் உண்மையான இறைவனை தேடியும்தான் மதம் மாறினார்கள்.

பொருளாதாரத்திற்காகவோ, பணத்திற்காகவோ ஆசை காட்டியோ அச்சுறுத்தியோ மதம் மாறவில்லை. (விடியல் வெள்ளி)

## முஸ்லிம்களாகிய நாம் என்ன செய்ய வேண்டும்?

எல்லாவிதமான பிரச்சனைக்கும் குர்ஆனிலும், ஹதீஸ்யிலும் தீர்வு இருக்கிறது.

இப்போதுதான் இதுபோன்ற பிரச்சனைகளுக்கு சட்டத்தின் பெயரில் (மதமாற்ற தடைச் சட்டம்) என்று வந்திருக்கிறது. இதற்கு முன்பு பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்த அரசாங்கத்தாலும் ,

அதிகார வர்க்கத்தினாலும் பல பிரச்சனை களை எதிர்கொண்டு இருக்கின்றது. நம்முடைய முஸ்லிம் சமுதாயம்.

(உதாரணம்)

சூரத்துல் புருஜ் (நெருப்பு குண்டவாசிகள்)

சூரத்துல் காஹப் (குகைவாசிகள்)

மூஸா (அலை) காலத்தில் ஃபிர்அவ்னுடைய தொந்தரவு

இப்ராஹிம் (அலை) காலத்தில் நம் கருத்துடைய தொந்தரவும் இதற்கும் மேலாக இருந்தாலும் தாஃபா பணியை செய்து கொண்டிருந்தார்கள்.

ஆனால், இப்படியெல்லாம் கஷ்டப்பட வேண்டியதில்லை. நாம் வாழும் இந்த நாட்டில் தாஃவா செய்வது மிகவும் எளிது. ஆன்மீகத் தேடல் அதிகம் உள்ள நாடு. தோண்டத் தோண்ட தங்கம் கிடைக்குதோ இல்லையோ சிலைகள் கிடைக்கும். பல பாலியல் பிரச்சனைகள், பல கொலைகள், கொள்ளைகள் சம்பந்தப்பட்ட நடவடிக்கை கள் எடுத்த சாமியார்கள் இருந்தாலும் சாமியார்களின் எண்ணிக்கை குறையவில்லை. ஏனென்றால், ஆன்மீகம் தேடல் நிறைந்த நாடு நம் நாடு. சாதாரணமாக நம் நாட்டில் சில பொருட்களை வாங்கச் செல்லும்போது, உதாரணமாக, தக்காளியாக இருந்தாலும், கொத்தமல்லியாக இருந்தாலும் பார்த்துப் பார்த்து வாங்கும் இந்த நாட்டில் தன்னுடைய தன்மானத்தையும், தலையையும் சமர்ப்பிப்பது. ஓர் சிலையிடத்திலா? ஓர் மிருகமிடத்திலா? இல்லை. தன்னை படைத்து, வளர்க்கின்ற இறைவனிடத்திலா? என்று புரிய வைத்தால் போதும், இதுபோன்ற பிரச்சனைகள் வரும் போது இறைவனுடைய திருவசனம் ஞாபகத்திற்கு வரவேண்டும். அல்லாஹ் உடைய மார்க்கத்தை வாயால் ஊதி அணைத்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். அல்லாஹ் உடைய ஜோதியை பரிபூரணம் ஆக்கிவிடுவான். (அல்- குர்ஆன்)

தம் வாய்களைக் கொண்டே அல்லாஹ்வின் ஒளியை (ஊதி) அணைத்து விட அவர்கள் விரும்புகின்றார்கள். ஆனால், காஃபிர்கள் வெறுத்த போதிலும் அல்லாஹ் தன் ஒளியை பூர்த்தியாக்கி வைக்காமல் இருக்க மாட்டான். (9:32)

## எந்த மதத்திற்கு போக வேண்டும்?

இன்று பலர் இந்த கடவுளின் பெயரால் நடக்கப்படும் கொடுமைகளை கண்டு, கடவுளே இல்லை என்றும் பல கொள்கைகளை முன்னிறுத்தி அதன் அடிப்படையில் இந்த சீரழிவுகளை சரி செய்து விடலாம் என்றும் எண்ணி, கம்யூனிஸம், பௌத்தம் போன்ற கொள்கைகளை முன்னிலைப்படுத்தினர். ஆனால், அது வெல்லாம் தோல்வியைக் கண்டது.

## கம்யூனிஸம்:

அது தோன்றிய நாட்டிலேயே மண்ணைக் கவ்வியது. உதாரணத்திற்கு பல விஷயங்களை சொல்லலாம். ஏழைகளுக்கான ஓர் கொள்ளை தான் கம்யூனிஸம். ஆகையால் அங்கே பணக்காரர்களுக்கு நீதி இல்லை. கூடு தகவல்களுக்கு "கம்யூனிஸம், இஸ்லாமும்" என்ற புத்தகத்தை படியுங்கள். (வேர்கள் பதிப்பகம்)

## பௌத்தம்

அமைதியின் மார்க்கம் மேலேகண்ட சில உதாரணங்களே போதும். ஏனென்றால், 'தலித்'போன்ற மக்களை அமைதி என்ற பெயரினாலேயே அடிமைப்படுத்தி இருக் கிறார்கள். கூடுதல் தகவலுக்கு பௌத்தமா? இஸ்லாமா? - மார்க்ஸ் எழுதிய வேர்கள் பதிப்பகம் புத்தகத்தை படியுங்கள்.

## கிருஸ்தவம்

மதம் மாறினாலும் அங்கும் சாதிகள், பிரிவினைகள் இருக்கத்தான் செய்கிறது. இதற்கு தீர்வு, நம் அனைவரையும் படைத்த 'அல்லாஹ்' வை ஏற்பது மட்டும்தான். ஏனென்றால், இங்கே தான் சாதிகள் இல்லை. அடிமைத்தனம் இல்லை அநீதிகள் இல்லை.

இந்த மதம் மட்டும் தான் அடிமைத்தனத்தை அழித்து, அராஜக ஆட்சியை அடக்கி, கலாச்சார சீரழிவை சரி செய்து, நீதி என்ற பெயரில் நடக்கும் அநீதிகளை அழித்து, உண்மை நீதியை வழங்கி, மனிதர்களை எந்த மனிதனுக்கும் எந்த சித்தாந்தங்களுக்கும் அடிமைப்படுத்தாமல் மனிதனை மனிதனாக வாழ வைக்கும் ஒரே மார்க்கம் இஸ்லாம் மட்டும் தான்.

ஆகையால், நாம் தாய் மார்க்கம், தந்தை மார்க்கம், முன்னோர் மார்க்கம், உண்மை மார்க்கமான இஸ்லாமிய மார்க்கத்திற்கு திரும்பினால் மட்டும் தான் உலக வெற்றி மட்டுமல்லாமல் அனைவருக்கும் மறுமை வெற்றியும் கிடைக்கும். உங்களையும், என்னையும் படைத்த இறைவன் தன்னுடைய திருக்குர்ஆனில் இப்படி சொல்கிறான் : (4:1) மனிதர்களே! உங்கள் இறைவனுக்கு பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அதிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிடமிருந்து அநேக ஆண்களையும், பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான். ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள். அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள். மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்களை கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.

# சி.ஐ.ஏ.வின் இரகசிய சித்ரவதைக்கூடங்கள் பற்றிய அமெரிக்காவின் செனட் ஆய்வறிக்கை

**19. சி.ஐ.ஏ-வின் கைது மற்றும் விசாரணை நிகழ்ச்சி இயல்பாகவே ஏற்றுக்கொள்ள இயலாததாக இருந்தது. ஆதாரமற்ற பத்திரிகை வெளிப்பாடுகள், மற்ற நாடுகளின் குறைவான ஒத்துழைப்பு, சட்ட மற்றும் கவனக்குறைவு பிரச்சனைகள் போன்றவற்றின் காரணமாக 2006ல் முடிந்தது.**

தன்னுடைய கள்ளத்தனமாக சிறைச்சாலைகளை நடத்திட சி.ஐ.ஏ.விற்கு மற்ற நாடுகளின் ஒத்துழைப்பும் அவர்கள் இரகசியம் காக்க வேண்டியதும் அவசியமானது.

இந்த இரண்டு தேவைகளும் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் இதனைப்பற்றி பொதுமக்கள் முன்னிலையில் செப்டம்பர் 6 2006ல் வெளிப்படுத்துவதற்கு முன்னதாகவே சி.ஐ.ஏ.வின் இரகசிய சிறைச்சாலைகளை பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தி கொஞ்சம் கொஞ்சமாக அதனை அரித்து விட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியின் ஆரம்ப கட்டத்திலேயே சி.ஐ.ஏ.விற்கு அதன் இந்த கள்ளத்தனமாக சிறைச்சாலைகளை நடத்திட ஒத்துழைப்பு நல்கும் நாடுகளை இனம் கண்டு கொள்வதில் பல சவால்களை சந்தித்தது.

சில நாடுகளை தவிர்த்து சி.ஐ.ஏ. தன் கள்ள சிறைச்சாலைகளை உருவாக்கி இருந்த பல இடங்களில் இருந்து அதனை மாற்ற வேண்டி இருந்தது. இதற்கு காரணம் அந்த நாடுகளில் அரசாங்கத்தின் அழுத்தம் அல்லது பொதுமக்களுக்கு இதனை பற்றி தெரிய வந்ததால் பொதுமக்களின் எதிர்ப்பு.

2005ன் ஆரம்பத்தில் இருந்து சி.ஐ.ஏ தன் கள்ளச்சிறைச்சாலைகளில் இருந்து கைதிகளை அமெரிக்க இராணுவத்தின் காவலுக்கு அனுப்ப அமெரிக்க பாதுகாப்புத் துறையை சமாதானப்படுத்த பிரயர்த்தனப்பட வேண்டி இருந்தது. இதனை சி.ஐ.ஏ 2006இல் தானே ஒத்துக்கொள்ள வேண்டியதானது.

மற்ற நாடுகளில் செயல்பட்ட சி.ஐ.ஏ.வின் கள்ளச் சிறைச்சாலைகளில் போதுமான அளவு மருத்துவ வசதிகள் ஏற்பாடு செய்யாமல் விட்டது அந்த சிறைச்சாலைகளை இழுத்து மூடும் நிலைக்கு கொண்டு வந்து விட்டது. ஒரு நாட்டில் மிகக்கடுமையாக நோயில் பாதிக்கப்பட்ட ஒரு கைதியை உள்ளூர் மருத்துவமனையில் அனுமதித்ததில் ஏற்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் அந்த நாட்டில் இருந்த சி.ஐ.ஏ.வின் கள்ளச்சிறைச்சாலையை மூட ஏதுவானது. சி.ஐ.ஏ.வின் கோரிக்கையை ஏற்று இந்த கள்ளச்சிறைச்சாலைகளில் இருந்த கைதிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க அமெரிக்க பாதுகாப்பு துறையும் முன்வரவில்லை.

2003ன் மத்தியில் அமெரிக்காவின் பன்னாட்டு தினத்தை முன்னிட்டு (United Nations International Day) அமெரிக்க அதிபர் சித்ரவதை செய்யப்பட்ட நபர்களுக்கு ஆதரவாக வெளியிட்ட அறிக்கையிலும் வெள்ளை மாளிகையின் பொது

அறிக்கையிலும் அமெரிக்காவின் வசம் உள்ள கைதிகள் மனித நேயத்துடன் நடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக இந்த நிகழ்ச்சியை தொடர்வதா வேண்டாமா என்பது குறித்து சி.ஐ.ஏ மீண்டும் வெள்ளை மாளிகையின் அங்கீகாரத்தை பெறவேண்டியதானது.

2004ன் மத்தியில் சி.ஐ.ஏ.வின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் இந்த நிகழ்ச்சி குறித்து சட்ட குழும (Office of LegalCounsel) அலுவலகத்தின் சட்ட ஆலோசனையை பரிந்துரை செய்ததன் காரணமாக சி.ஐ.ஏ அதன் மேம்படுத்தப்பட்ட விசாரணை முறையை தற்காலிகமாக நிறுத்த வேண்டியதானது.

ரசூல் (எ) புஷ் வழக்கில் அமெரிக்க உச்ச நீதிமன்றம் தந்த உத்தரவின் அடிப்படையில் கியூபாவில் இருந்த குவாண்டனாமோ சிறையில் இருந்து கைதிகளை வெளியேற்ற வேண்டியதானது.

2005ன் கடைசியிலும் 2006ன் ஆரம்பத்திலும் கைதிகளை நடத்தும் முறை சட்டம் (Detainee Treatment Act) மற்றும் ஹம்தன் (எ) ரம்ஸ்ஃபீல்ட் என்ற வழக்கில் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆகியவற்றின் காரணமாக சி.ஐ.ஏ மீண்டும் தன் மேம்படுத்தப்பட்ட விசாரணை முறையை தற்காலிகமாக நிறுத்த வேண்டியதானது.

2006இல் பத்திரிகைகள் வெளிப்படுத்தியது, மற்ற நாடுகளின் விருப்பமின்மை, சட்ட ரீதியான பிரச்சனைகள் மற்றும் கவனக்குறைவு போன்றவை சி.ஐ.ஏ மற்ற நாடுகளில் கள்ளத்தனமாக சிறைச்சாலைகளை இயக்குவதை பெரிய அளவில் முடிவுக்கு கொண்டு வந்தது.

குறைந்த பட்சம் 113 நபர்களை 2004ம் ஆண்டு முழுவதும் கைது செய்த சி.ஐ.ஏ 2005ல் 5 நபர்களை மட்டுமே கைது செய்தது. 2006ல் ஒருவரையும் 2007ல் ஒருவரையும் கைது செய்தது. மார்ச் 2006ல் இந்த நிகழ்ச்சி ஒரே ஒரு நாட்டில் மட்டுமே தொடர்ந்தது. சி.ஐ.ஏ தன் மேம்படுத்தப்பட்ட விசாரணை முறையை கடைசியாக நவம்பர் 8 2007ல் உபயோகப்படுத்தியது. சி.ஐ.ஏ ஏப்ரல் 2008க்கு பிறகு எந்த கைதிகளையும் பிடித்து வரவில்லை.

**20. சி.ஐ.ஏ-வின் கைது மற்றும் விசாரணை நிகழ்ச்சி உலகத்தின் மத்தியில் அமெரிக்காவின் பெயரை பாழாக்கியது. அது பண ரீதியாகவும் பண ரீதியில்லாமலும் பல நட்டங்களை ஏற்படுத்தியது.**

சி.ஐ.ஏ.வின் இந்த நிகழ்ச்சி அமெரிக்காவிற்கும் அதன் தோழமை நாடுகளுக்கும் இடையே பதட்டத்தை ஏற்படுத்தியது. அமெரிக்காவை பல அரசியல் நடவடிக்கைகளுக்கு இது உள்ளாக்கியது. இது அமெரிக்காவிற்கும் அந்த நாடுகளுக்கும் இடையே இருந்த உளவு ரீதியான உறவுகளை சிக்கலாக்கி பாழாக்கியது.

# நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்!



## விடுதலைப் போரின் மறைக்க முடியாத ஆனால் மறைத்துவிட்ட அத்தியாயம்

**இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு.**

**அவர் ஏன் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸுக்கு அப்படி அஞ்சினார்?**

சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் கல்கத்தாவில் கல்லூரி படிப்பிக்க வந்திருந்த நாள்களில்தான் அந்த அநியாயத்தை கண்டார்கள். ஆமாம்! ஆங்கிலேயர்கள் இந்தியர்களைப் புன்மைத் தேரைகளாக நடத்தினார்கள். அவர்கள் பாமரர்களையும், சாமான்யர்களையும் எள்ளி நகையாடினார்கள், ஏளனப்படுத்தினார்கள் என்றில்லை. மாறாக படித்தவர்களையும், சீமான்களையும் அப்படித்தான் நடத்தினார்கள்.

ஆங்கிலேயர்களின் செயல்கள் அனைத்தும் தாங்கிக் கொள்ள இயலாதவை! அவமானம் நிறைந்தவை. இப்படித்தான் பார்த்தார்கள் சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் ஆங்கிலேயர்களின் செயல்களை.

இதை தன்னோடு கல்வி பயின்ற சகமாணவர்களோடு விவாதித்தார்கள். சில தீர்வுகளையும் தேடினார்கள்.

அந்தத் தீர்வுதான் அவருக்கு அடுத்தடுத்து சோதனைகளைத் தந்தது. அது

நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ், சக நண்பர்களோடு இந்தியர்களின் நிலையைப் பற்றிப் பேசியது. கல்லூரி தலைவர்வரைச்

சென்றது. கல்லூரி தலைவர் அவரை அழைத்துச் எச்சரித்தார்.

இதையே கங்கணம் கட்டிக் கொண்டிருந்த முதல்வர், 1915இல் நடந்த நுழைவுத் தேர்வில் நேத்தாஜிக்கு உரிய மதிப்பெண்களைத் தந்திடவில்லை. மதிப்பெண்களைக் குறைத்துப் போட்டு ஏதோ அவர் தேர்வில் தோற்றுப் போகவில்லை என்பதைப் போல் காட்டிக் கொண்டார். மாணவன் சந்திரபோஸ் அதை அடுத்தக் கட்டப் படிப்பில் சுபாஷ் சந்திரபோஷ் அவர் ‘Philosophy’ என்ற தத்துவ இயலில் B.A. Bachelor of Arts இளம் நிலை பட்டப்படிப்பைப் படித்தார்.

அப்போதுதான் கல்கத்தா அரசு கல்லூரி என்ற Presidency கல்லூரியில் அது நடந்தது.

அரசு கல்லூரியில் பேராசிரியர்கள் E.F. Oaten இ.எஃப். ஒயாட்டன் என்பவர். இவர் இனவெறி தலைக்கேறிய ஓர் ஆங்கிலேயர். இவர் நமது இந்தியத மாணவர்கள் சிலரை அடித்துவிட்டார். இதற்கு அவர் அந்த மாணவர்கள் அவர் செல்லும் கல்லூரியின் பாதையில் நின்றார்கள் என்பதைக் காரணமாகச் சொன்னார்.

அவர் சொன்ன இந்தக் காரணம் ம்ாணவர்களிடையே கொந்தளிப்புகளை ஏற்படுத்தியது. மாணவர்கள் அவரை வழி மறித்தார்கள். அவர் மன்னிப்புக் கேட்கும் வரை அவரை வகுப்பறைக்குள் அனுப்ப மாட்டோம் எனக் கூறிவிட்டார்கள்.

ஆனால் அந்த ஆங்கில பேராசிரியர் எந்த நிலையிலும் மன்னிப்புக் கேட்க மாட்டேன் எனச் சொல்லி விட்டார். மாணவர்களும் விடுவதாக இல்லை. செய்திக் காட்டுத்தீயாக கல்லூரி முழுவதும் பரவியது. மொத்தமாக எல்லா மாணவர்களும் இதில் கலந்து கொண்டார்கள்.

கல்லூரி நடக்க வில்லை. ஆங்கிலேயர் களால் நிறுவப்பட்டு வந்த கல்லூரி நிருவாகம் கலவரப்பட்டது.

கல்லூரி நிருவாகம் மாணவர்களின் கிளர்ச்சிக்கு காரணமானவர்களில் முக்கியமானவர் சுபாஷ் சந்திர போஸ்தான் என்ற முடிவுக்கு வந்தது.

சுபாஷ் சந்திர போஸ்-ஐ அழைத்து எச்சரித்தது. ஆனால் சுபாஷ் சந்திர போஸ் விட்டுக் கொடுப்பதாக இல்லை. தனது நிலையிலேயே உறுதியாக நின்றார். பேராசிரியர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்பதில் உறுதியாக நின்றார். வேறு வழியின்றி பேராசிரியர் இறங்கி வந்தார். மன்னிப்புக் கேட்கவில்லை வருத்தம் தெரிவித்தார்.

அதனால் கல்லூரி முதல்வர் மாணவர் களில் கிளர்ச்சிக்குக் காரணமானவர்கள் என நினைத்தவர்களையெல்லாம் அபாரதங்களை விதித்தார்.

மாணவர்களும் கட்டுப்பட பிரச்னை ஒருவாறாக ஓர் முடிவுக்கு வந்தது. சுபாஷ் சந்திர போஸ் வெள்ளையர்களின் இன வெறிக்கு எதிராகத் தொடர்ந்து மாணவர் களை அணி திரட்டிக் கொண்டிருந்தார். அந்த பேராசிரியர் மீண்டும் ஓர் பிரச்னையை கிளப்பினார்.

மீண்டும் ஒரு மாணவரை அடித்தார். இந்த முறை மாணவர்கள் திரண்டு எழுந்தார்கள். அந்தப் பேராசிரியரை நய்யப்புடைத்தார்கள்.

கலவர பூமியானது கல்லூரி. மாணவர்கள் வீறு கொண்டெழுந்தார்கள்.

கல்லூரி இழுத்து மூடப்பட்டது. கல்லூரி நிருவாகம் ஒரு விசாரணை கமிஷனை நியமித்தது. அதில் மூன்று இந்தியர்களும் இருந்தார்கள். மாணவர்களின் நிலையை விளக்கிட அல்லது வாதிட சுபாஷ் சந்திர போஸ் நியமிக்கப்ட்டார்.

விசாரணையின் போது, பேராசிரியர் மாணவர் தாக்கியதைப் பற்றி மட்டும் சுபாஷ் சந்திர போஸ் அந்த விசாரணை கமிஷனிடம் பேசவில்லை. ஆங்கிலேயர்கள் கல்லூரியிலும்,

கல்லூரிக்கு வெளியேயும் கல்கத்தாவின் வீதிகளிலும் அவர்கள் கட்டவிழ்த்திடும் அநியாயங்கள், கொடுமைகள் எல்லா வற்றையும் எடுத்துச் சொன்னார்கள். சொல்லும் போது ஒரு தனி வேகம் வெளிப்பட்டது.

விசாரணையின் கமிஷனின் அறிக்கை யில் மொத்தக் கலவரத்திற்கும் சுபாஷ் சந்திர போஸ் தான் காரணம் என முடிவு செய்தார்கள்.

சுபாஷ் சந்திர போஸ் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

சுபாஷ் சந்திர போஸ் மீண்டும் கட்டாக் வந்து விட்டார். குடும்பத்தினர் அவரைக் கோபித்துக் கொள்ளவில்லை. ஆறுதலாகவே இருந்தார்கள். சுபாஷ் சந்திரபோஸ் சமுதாயப் பணிகளில் தன்னைப் பிணைத்துக் கொண்டார்.

இரண்டாண்டுகளுக்குப் பின் சுபாஷ் சந்திரபோஸ் தன் கல்லூரி படிப்பை மீண்டும் தொடர விரும்பினார். அரசு கல்லூரிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் மனுக்களைப் போட்டார்.

பல்கலைக் கழகம் அரசு கல்லூரியில் நிச்சயமாகப் மீண்டும் சேர்ந்திட இயலாது. வேறு கல்லூரிகளில் முயற்சி செய்யவும் எனக் கூறிவிட்டது.

இதைப் பிடித்துக் கொண்டு கல்கத்தாவிலிருந்த மற்றொரு கல்லூரியான ஸ்கார்ட்டிஷ் சர்ச் கல்லூரியிக்குச் (Scottish Church College) சென்று தன்னுடைய கல்வியைத் தொடர்ந்திட அனுமதி கேட்டார். அந்தக் கல்லூரியின் முதல்வர் (Dr. Uruguheaert) டாக்டர் யுர்கூகார்ட் அவர்கள் சம்மதம் தெரிவித்தார்கள். ஆனால் ஒரு நிபந்தனை கல்கத்தா அரசு கல்லூரியின் முதல்வர் அதற்கு ஒப்புதல் தந்திட வேண்டும் என்றார்.

கல்கத்தா அரசு கல்லூரி முதல்வரிடம் அனுமதியைப் பெறுகின்ற பணியை சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் சகோதரர் சரத் சந்திர போஸ் அவர்கள் கவனித்துக் கொண்டார்கள். ஒப்புதல் கடிதத்தைப் பெற்றே விட்டார்கள். இதனால் ஸ்கார்டிஷ் கல்லூரியில் கல்வியைத் தொடரும் வாய்ப்புக் கிட்டியது.

மூன்றாம் ஆண்டு 1919 இல் இளம் நிலை பட்டப் படிப்பை முதல் வகுப்பில் தேறி முடித்தார் சுபாஷ் சந்திர போஸ். இதனிடையே இராணுவத்தில் சேர்ந்திட முயற்சிகளை மேற்கொண்டார். பார்வை சற்றுக்குறைவாக இருந்தது என்பதனால் இராணுவத்தில் சேர்ந்திட இயலவில்லை. ஆனால் இணை இராணுவமான (Territorial Army) எல்லைப் பாதுகாப்புப் படையில் இணைந்து இராணுவப்பயிற்சியை முடித்தார்.

இந்நிலையில் அன்றைய ஆட்சிப் பணி படிப்பு என்ற ICS - Indian Civil Services , இந்திய ஆட்சிப் பணி சேவை - என்ற படிப்பைப் படிக்க வேண்டும என அவருடைய தந்தை விரும்பினார். இந்தப் பணியைத்தான் இந்தியாவில் IAS என்கின்றார்கள், Indian Adminstration Service என்கின்றார்.

அன்றைக்கு இந்தப் பணிக்காகப் படிக்க வேண்டும் என்றால் லண்டன் மாநகரம் செல்ல வேண்டும்.

ஆமாம்! நாம் ஆங்கிலேயர்களின் தலைநகருக்கே சென்று அவர்கள் கற்றுத்தரும் கல்வியைக் கற்று, இந்தியா திரும்ப வந்து இந்தியர்களை அடிமைகளாக நிருவகிக்க வேண்டும்.

இதனால் சுபாஷ் சந்திர போஸ் லண்டன் செல்லவோ, இந்தப் படிப்பை படிக்கவோ ஆங்கிலேயர்களிடம் சம்பளம் வாங்கிக் கொண்டு அவர்கள் விருப்பப்படி இந்தியர்களை ஆட்டிப் படைக்கவோ விரும்பவில்லை.

இதனால் தந்தையின் விருப்பத்தை உடனேயே நிறைவேற்றிட இயலவில்லை. தயங்கினார். தந்தை விடுவதாக இல்லை. தந்தைக்கு இணங்கினார். லண்டன் சென்றார். ஆங்கில நாட்டின் பிரசித்திப் பெற்ற கல்வி நிறுவனம் கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் அந்தப் பல்கலைக்கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

# பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி

**ஆங்கிலம் : கரன் ஆம்ஸ்டிராங்** **தமிழில் : மு. குலாம் முஹம்மத்**



**நவீனங்கள் நிறைந்த இன்றைய உலகைப் பற்றி யார் கொள்ளும் பார்வையும் முழுமையானதாக அமைந்திடாது. அவர் இஸ்லாத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றால்.**

**இஸ்லாத்தைப் புரிந்திட வேண்டும் என்றால், இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் புரிந்திட வேண்டும்.**

**முஹம்மத் (ஸல்) அவர்களை ஓர் இறைத்தூதர் என்ற அளவிலும், ஒரு மனிதர் என்ற அளவிலும் ஒரு தனி மனிதர் என்ற அளவிலும் புரிந்திட வேண்டும்.**

**இந்த உலகிற்கு மதங்களைக் கொண்டு வந்தவர்களில் மிகவும் அதிகமாக அறியப்படுபவர் முஹம்மத் (ஸல்) அவர்கள்.**

**அவர்களைப் பற்றி வெளிவந்துள்ள இலக்கியங்கள் பலப்பல. இந்த இலக்கியங்களில் பல அவரது வாழ்க்கையை சரியான கோணத்தில் நம் முன் சமர்ப்பிக்கின்றன. இன்னும் பல, வேண்டுமென்றே அவருடைய வாழ்க்கையைத் திரித்தும் புரட்டியும் தவறான எண்ணங்களையும் அவற்றின் வழி தவறான சிந்தனைகளையும் விதைக்கின்றன, வளர்க்கின்றன.**

**ஆனால் கரன் ஆம்ஸ்ட்ராங் -இன் இந்த நூல் அந்த கண்ணியமிக்க மனிதரின் வாழ்க்கையை நடுநிலையோடு நம்முன் சமர்ப்பிக்கின்றது.**

SUNDAY TIMES **லண்டலிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ்**

# அபாஃபீலுக்குப் பின்

மக்கா உலக வரை படத்தில் இடம் பெறுவதற்கும் இன்றளவும் அது உலக இயக்கங்களின், உலக அரசியல்களின் மார்பிடமாக இருப்பதற்கும், முக்கிய நிகழ்வாக அமைந்தது, முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறப்பாகும்.

அந்நிலையில் மக்கத்து மக்களிடம் இருந்த சில சில பழக்க வழக்கங்கள் கூட சிதைந்து சின்னாபின்னமாகின.

அவர்கள் கற்காலத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் காட்டுமிராண்டித் தனமும், முரட்டுப் பழக்க வழக்கங்களும் மிகைந்து நின்றன. இதனால் அவர்கள் வழிப்பறி, கொள்ளை, ஏழைகள், அநாதைகள் இவர்களின் உரிமைகளை அபகரிப்பது, அவர்களின் உடமைகளைத் தங்களது ஆக்கிக் கொள்வது போன்றவற்றில் தங்களை ஈடுபடுத்திடுவதில் பெருமை கண்டார்கள்.

இவற்றின் மூலம் தங்கள் வாட்டத்தையும், வறுமையையும் போக்கிக் கொள்வதும், இந்த வகையில் தங்களுக்குத் தங்கள் இறைவன் உதவி செய்துவிட்டான் என உவகைக் கொள்வதும், அவர்களுக்கு வழக்கமாகவும், வாடிக்கையாகவும் ஆகிப் போனது.

இந்நிலையில்தான் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஹாசிமா குலம் என்ற உயர்ந்த குலத்தில் பிறந்தார்கள். உயர்ந்த குலம்

என்றால் அன்றைய அரபு குலத்திலுள்ள அனைவரும் உயர்ந்தவர்கள் என்றும் எண்ணுகின்ற குலம். அங்கு அன்றைய நாள்களில் அந்தக் குலப் பெருமைகளே அதிகமாகப் பீற்றிக் கொள்ளப்பட்ட பெருமையாக இருந்தது.

இந்தக் ஹாசிமா குலத்தைச் சார்ந்தவர்கள் குலத்தால் உயர்ந்தவர்கள் மட்டுமல்ல, எண்ணம், சிந்தனை உலகை அவர்கள் பார்த்த பார்வை இவற்றாலும் அவர்கள் உயர்ந்தும் விரிந்தும் நின்றார்கள்.

முஹம்மத் (ஸல்) அவர்களின் பெரும் பாட்டனார் தான், அன்றைய நாள்களில் சிரியா, யேமன் ஆகிய நாடுகளோடு வியாபாரத் தொடர்புகளை வைத்திருந்தார்கள்.

இதனிலும் மேலாக, உலகெங்குமிருந்து மக்கா வந்த புனித யாத்திரீகர்களுக்குப் புனிதப் பயணிகளுக்குத் தண்ணீர் புகுட்டுவத இதரப் பணிவிடைகளைச் செய்வத போன்ற சேவைகளையும் காசிா குலத்தவர்களே செய்தார்கள். அன்றைய நாள்களில் இந்தப் பணியை செய்திடும் வாய்ப்பைப் பெறும் குலத்தவர்களே, மிகவும் உயர்ந்த குலத்தவர்களாய் போற்றப் பெற்றார்கள்.

முஹம்மது (ஸல்) அவர்களின் குலமும் கோத்திரமும் உயர்ந்த அனைவராலும் போற்றப் பெற்றக் குலமாகவும் கோத்திர மாகவும் இருந்த இந்நிலையில்தான் தொடர்ந்து பல சோகங்களுக்குப் முஹம்மத் (ஸல்) அவர்கள் எதிர் கொண்ட வேண்டி யிருந்தது.

அவற்றை அடுத்த இதழில் பார்ப்போம்.

இன்ஷா அல்லாஹ்.

**தொடரும்**





விலை ரு. 60 மட்டுமே

**தீவிரவாதிகள் என்று சித்தரிக்கப்படும் தாலிபான்கள் யார்? என்பதை தெரிந்து கொள்ள இந்த நூல்களை படியுங்கள்!**




விலை ரு. 90 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**
**சென்னை - 600 001.**
**தொடர்ப்புக்கு : 8148129887**

# மூத்த பத்திரிக்கையாளர் 'வைகறை வெளிச்சம்' ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்களுக்கு சீதக்காதி அறக்கட்டளை விருது!

தமிழகத்தின் தலைநகர் சென்னையை மையமாக கொண்டு இயங்கி வருகிறது சீதக்காதி அறக்கட்டளை.

1984-ம் ஆண்டு முதல் கடந்த முப்பத்து இரண்டு வருடங்களாக ஆண்டுதோறும் தமிழகத்தின் தலைச் சிறந்த எழுத்தாளர் களைத் தேர்ந்தெடுத்து அவர்களில் ஒருவருக்கு பாராட்டும் பதக்கமும் சன்மானமும் வழங்கி வருகிறது.

அல்ஹாஜ் டாக்டர் பி.எஸ். அப்துர் ரஹ்மான் அவர்கள் நிறுவிய இந்த அறக்கட்டளை அன்னாரின் மறைவுக்கு பின்னரும் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறது.

இந்த 2015ம் ஆண்டு சிறந்த எழுத்தாளர்களுக்கான விருதை 'வைகறை வெளிச்சம்' ஆசிரியர் மு. குலாம் முஹம்மது பெற்றார்.

இதற்கான நிகழ்ச்சி டிசம்பர் 4ம் தேதி அண்ணா சாலை உமாபதி அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவுக்கு சீதக்காதி அறக்கட்டளை யின் மேனேஜிங் டிரஸ்டி எம்.கே. சதக் அப்துல் காதிர் அவர்கள் தலைமை ஏற்றார்.

வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் மௌலவி இல்யாஸ் ரியாஜி சிறப்புரை யாற்றினார். பின்னர் சீதக்காதி அறக்கட்டளை சார்பில் ஒரு லட்சம் ரூபாய் பணமுடிப்பும் பாராட்டுப் பத்திரமும் மு. குலாம் முஹம்மது அவர்களுக்கு வழங்கப்பட்டன.

பின்னர் குலாம் முஹம்மது ஏற்புரை நிகழ்த்தினார். வி.என். ஜலால் நன்றியுரை யாற்றினார். மவ்லவி டாக்டர் மசூது ஜமாலி அவர்களின் துஆவுடன் இனிதே நிகழ்ச்சி நிறைவுற்றது.

விழாவுக்கான ஏற்பாடுகளையும் செய்து, வந்தவர்களை இன்முகத்துடன் உபசரித்து விழா முடியும் வரை சுறுசுறுப்பாக நிகழ்ச்சி தொகுப்பையும் வழங்கினார் M.K.E. உமர் அப்துல் காதிர் அவர்கள்.

விழாவின் முடிவில் மழை வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டது.

சென்னையை மழையும், வெள்ளமும் புரட்டிப் போட்டுக் கொண்டிருந்த போது தான் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. குறித்த நாளில் நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என்ற விழா ஏற்பாட்டாளர்களின் ஆர்வமே இதற்குக் காரணம்.

சாலைப் போக்குவரத்து முற்றிலும் துண்டிக்கப்பட்டுவிட்டதால் ஆர்வமுள்ள பலர் விழாவுக்கு வரமுடியாமல் போனதை தொலைபேசியில் கூறி வருந்தினர். கவிக்கோ, மார்க்ஸ் முதலிய மூத்த எழுத்தாளர்கள் "விழாவை மற்றொரு தேதிக்குத் தள்ளி வைத்திருக்கலாம்" என்று ஆதங்கப்பட்டனர்.

அழைப்பிதழ் கிடைக்கப்பெற்ற அனைவரும் "குலாம் முஹம்மது அவர்கள் இந்த விருதை எப்போதோ பெற்றிருக்க வேண்டியவர். இது தாமதமான அங்கீகாரம் தான்" என்றனர்.

தேர்வுக்கு குழுவில் உள்ள அறிஞர்களும், சீதக்காதி அறக்கட்டளை அரங்காவலர்களும் இதையே கூறினார்கள். இது வைகறை ஆசிரியருக்கு கிடைத்த கூடுதல் பாராட்டு. அல்ஹம்துலில்லாஹ்

ஏற்புரையாற்றிய மு. குலாம் முஹம்மது அவர்கள் தமது ஏற்புரையில் பேசியதாவது:

புகழும், புகட்சியும், அல்லாஹு ஒருவனுக்கே! சாந்தியும், சமாதானமும்,

முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், உற்றார் உறவினர், குழுமி இருப்போர் அனைவர் மீதும் உண்டாவதாக!

இந்த விருதை தந்து என்னை உற்சாகப் படுத்தியமைக்கும், பாராட்டியமைக்கும் இதோடு தொடர்புடைய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த விருதுடன் வழங்கப்பட்ட ரூபாய் ஒரு லட்சத்தை ஒரு சிறுதொகைதான் என இங்கே விருதை வழங்கிய சீதக்காதி அறக்கட்டளையின் சார்பில் பேசிய அனைவரும் குறிப்பிட்டார்கள். உண்மையில் என்னைப் பொறுத்தவரை இது பெரும் தொகை தான்.

என்னுடைய சொந்த தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய பணத்தை என்னுடைய பிள்ளைகள் தந்த விடுவதல் இந்தப் பணத்தை நாங்கள் செய்து கொண்டிருக்கின்ற இலக்கியப் பணி, இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கின்ற பணி, எனப் பயனுள்ள பணிகளுக்கே செலவு செய்வேன். இன்ஷா அல்லாஹ். அதனால் விளையும் பயன்களின் 'சவாப்' இதில் சம்மந்தப்பட்ட அனைவருக்கும் கிடைக்கும். அல்லாஹ் வழங்கிட வேண்டும் என இந்த நல்ல நேரத்தில் இறைவனை வேண்டுகின்றேன்.

சீதக்காதி அறக்கட்டளையின் பணிகள் பற்றிப் பலரும் இங்கே பேசினார்கள். நான் இந்த அறக்கட்டளையின் பணிகளில் தொடக்க காலந் தொட்டே பயனடைந்து வருபவன். இந்த அரங்கம் வீற்றிருக்கும் வளாகத்தில் தான் மிகப் பெரியதொரு நூலகம் ஒன்றை நடத்தி வந்தார்கள். அந்த நூலகத்தில் உலகின் பல பாகங்களிலும் வெளியிடப்பட்ட இஸ்லாமிய நூல்களையும் இதரப் பொது அறிவு நூல்களையும் தருவித்து வைத் திருந்தீர்கள்.

அந்த நூலகத்தில்தான் ஷஹீத் செய்யித் குதுப் அவர்கள் அரபியில் எழுதிய "Milestones" மைல்கற்கள் என்ற நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பும் இடம் பெற்றிருந்தது. நான் ஏற்கனவே அந்த நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வைத்திருந்தேன். ஆனால் அது IFISO இப்சோப் என்ற International Federation of Students Organisation என்ற அமைப்பு வெளியிட்டிருந்தது. அதில் பல இடங்களில் புள்ளிகள். . . . . . என வைக்கப்பட்டிருந்தது. இப்படி புள்ளிகள் வைப்பதன் பொருள் சிலப்பகுதிகள் விடப்பட்டிருக்கின்றது என்பதாகும்.

சீதக்காதி அறக்கட்டளையின் நூலகத்தில் வைக்கப்பட்டிருந்த மைல்கற்கள் நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் நான் மொழி பெயர்ப்புக்குப் பயன்படுத்திய IFISO - இப்சோ அமைப்பின் மொழி பெயர்ப்பையும் ஒப்பிட்டுப்பார்த்தேன். சீதக்காதி அறக்கட்டளையின் நூலகத்தில் இடம் பெற்றிருந்த ஆங்கில மொழிபெயர்ப்பு முழுமையானதாக இருந்தது. ஆகவே அந்த மொழிபெயர்ப்பைப் அடிப்படையாகக் கொண்டு மீண்டும் அந்த நூலை மொழி பெயர்த்தேன். ஆகவே அந்த மொழி பெயர்ப்பு ஓர் சிறந்த மொழிபெயர்ப்பானது.

என்னுடைய மொழிபெயர்ப்பில் மிகவும் பிரபல்யமாகப் பேசப்படும், படிக்கப்படும் நூல் "இஸ்லாமிய எழுச்சியின் மைல் கற்கள்" என்ற இந்த நூல்தான். இன்று (7) ஏழு பதிப்புகளைச் சந்தித்து விட்டது. அதை இன்று பலரும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இப்படி ஒரு நல்ல மொழி பெயர்ப்புக்கு அன்று உதவியது சீதக்காதி அறக்கட்டளையில் நடத்தப்பட்ட நூல் நிலையம்தான்.

அதேபோல் நான் எழுதிய நூல்களில் இன்று அதிகமாக விற்பனை ஆகிவரும் நூல்களுள் ஒன்று ஆப்கானிஸ்தான் முகாஹிகளின் தியாக வரலாறு திரட்டிக் கொண்டிருந்த போது, தி இந்து ஆங்கில நாளிதழில் ஓர் நூலைப் பற்றிய ஆய்வு ஒன்றை வெளியிட்டிருந்தார்கள். அந்த நூல் ஆப்கானிஸ்தான் முஜாஹித்களைப் பற்றி ஓர் நேர்முக கள ஆய்வு. அதனை ளுயனேல முயடட சேண்டிகேல் என்பவர் எழுதியிருந்தார். அந்த நூலின் விலை ரூபாய் 200/-. அப்போது எனது வருவாயில் 200 ரூபாய் செலவு செய்து அந்த நூலை வாங்கிட

இயலவில்லை. என்ன செய்வது என சிந்திக்க லானேன். ஏன் சீதக்காதி அறக்கட்டளை நடத்தும் நூலகத்தில் இதனை வாங்கச் சொல்லக்கூடாது? என எண்ணி அப்போது சீதக்காதி அறக்கட்டளையில், எனக்கு நன்குதெரிந்த எங்கள் நலனில் அக்கறைக் கொண்ட கேப்டன் அமீர் அலீ அவர்களிடம் இதை சொன்னேன். உடனேயே அந்த நூலை வாங்கி நூலகத்தில் இடம் பெறச் செய்தார்கள். அந்த நூல் “ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு” என்ற நூல் உருவாகிட உதவியாய் அமைந்தது.

அதே போல் சீதக்காதி அறக்கட்டளை நடத்திய IAS - Indina Administrative Service என்ற ஆட்சிப் பணி பயிற்சிகளை மறந்திட முடியாது. அந்த அகாடமியில் நான் துணைவேந்தர் பாதுஷா அவர்களின் காலத்தில் வந்த உரையாற்றி இருக்கின்றேன். சீதக்காதி அறக்கட்டளையின் பரிபாலகர் ஹாஜி ஜலால் அவர்கள் அந்த அகாடமி இன்னும் அது போல் நடந்து வருகின்றது என்றார்கள்.

வழங்குகின்ற இந்த விருதுகள் வழி இலக்கியங்களை ஊக்குவித்திடும் அளவில் நீங்கள் ஒரு பெரும்பணியைச் செய்திருக் கின்றீர்கள்.

தொடக்க நாள்களில் ஓர் தலையைத் தந்து அந்த தலைப்பின் கீழ் ஆய்வுக் கட்டுரைகளை வரவேற்கிறீர்கள். அந்தத் தலைப்புகளில் பல அதுவரை நூல்கள் வெளிவந்த தலைப்புகளாக அமைந்திருந்தன. பல புதிய தலைப்புகளில், புதிய ஆய்வுகளும், நூல்களும் வெளிவந்திட அவை உதவின. அந்த வகையில் விடுதலைப் போரில் முஸ்லிம்கள் என்ற தலைப்பில் செ. திவான் அவர்கள் சமர்ப்பித்த ஆய்வைக் குறிப்பிடலாம். எழுத்தாளர் ஏ.என். சாமி போன்றவர்கள் இன்று அதுபோன்ற தலைப்பில் ஒரு பெரிய நூலைத் தந்துள்ளார்கள். அந்தத் தலைப்பு ஒரு சிறந்த திருப்பு முனையைத் தந்தது.

இந்நிலையல் அல்ஹாஜ் பி.எஸ். அப்துர் ரஹ்மான் அவர்களைப் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும்.

தமிழகத்தில் இஸ்லாத்தின் பக்கம் மக்களைஅழைக்கும் அழகியப் பணியில் தன்னைத் தந்து ஷஹீத் ஆனவர்கள், கூரியூர் ஜின்னா அவர்கள். அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்காகத் தகவல்களைத் திரட்டுவதற்காக அவர் வாழ்ந்த இராம நாதபுரம் மாவட்டத்தைச் சுற்றி வந்தேன். இறுதியில் கூரியூர் ஜின்ன ஷஹீத் அவர்களின் மூத்த மகள் மருத்துவர் நசீரா பர்வீன் அவர்களைச் சந்தித்தேன். அவர்கள் என்னிடம், “கூரியூர் ஜின்னா ஷஹீத் அவர்கள் தனக்கு பண நெருக்கடி ஏற்பட்ட நிலையில் வாப்பாவை சந்தித்தார்கள்.” ‘வாப்பா’ என்றே கூரியூர் ஜின்னா அவர்களின் மொத்தக் குடும்பத்தினரும் அல்ஹாஜி பி.எஸ். அப்துல் ரஹ்மான் அவர்களை அழைக்கின்றார்கள். “வாப்பா” அவர்களிடம் ரூபாய் 50,000/-ஐ கடனாகக் கேட்டார்கள். வாப்பா அவர்கள் ரூபாய் 50,000 தந்து இது கடன் அல்ல, நீ வைத்துக் கொள் எனக் கூறிவிட்டார். ஆனால், கூரியூர் ஜின்னா ஷஹீத் அவர்கள் அது கடன் என்றே பணத்தை பெற்று வந்தார்கள்.

இந்நிலையில் கூரியூர் ஜின்னா அவர்கள் தாஃவாவில் காட்டிய ஆர்வத்தைப் பொறுத்துக் கொள்ளாத சதிகாரர்கள் அவரைக் கொலை செய்து விட்டார்கள். அவர்களுடைய கடனை அடைத்திட என்னிடம் தந்தை ஜின்னா ஷஹீத் அவர்கள், பணத்தைத் தந்து வைத்திருந்தார்கள். நான் பணத்தை எடுத்துக் கொண்டு ‘வாப்பா’ விடம் விரைந்தேன். அப்போது வாப்பா அவர்கள் இந்தப் பணத்தை வைத்துக் கொள்ளுங்கள். இந்தப் பணத்தோடு இன்னும் கொஞ்சம் பணம் தருகிறேன். நீங்கள் ஓர் அறக்கட்டளையை நிறுவி இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியை தொடர்ந்து செய்யுங்கள் எனக் கூறினார்கள். எங்கள் தாஃவா பணியின் பலக் கட்டங்களிலும் துணை நின்றார்கள்.

இப்படி இஸ்லாமிய அழைப்புப் பணியில் பெரிய அளவில் ஆர்வம் காட்டி யவர்கள்தாம் இந்த அறக்கட்டளையின் உயிர் நாடி என்பதையும் நினைவில் கொள்கின் றோம். இவற்றை நன் கூரியூர் ஜின்னா ஷஹீத்

அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலும் குறிப்பிட்டிருக்கின்றேன்.

பல்வேறு சிறப்பான பணிகளைச் செய்து கொண்டிருக்கின்ற இந்த அறக் கட்டளையின் விருதைப் பெறுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். விருதை வழங்கியவர்களுக்கும் அதற்கு பரிந்துரை செய்த அண்ணன் கவிக்கோ அப்துல் ரஹ்மான், மனித உரிமை போராளி அ. மார்க்ஸ், சிறந்த வெளியீட்டாளர் ஷாஜஹான், இன்னும் அந்தக் குழுவில் இடம் பெற்ற சான்றோர்கள் அனைவருக்கும் என் நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கின்றேன்.

# வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், மு. குலாம் முஹம்மத் | ரூ. 25.00 |
| 8. | மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 | ரூ. 90.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163 | ரூ. 110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 | ரூ. 90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 21. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 22. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 23. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 24. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 | ரூ. 30.00 |
| 25. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 26. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 27. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 28. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | ரூ. 70.00 |
| 29. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 60.00 |
| 30. | இஸ்லாமும் பெண்களும் | ரூ. 70.00 |
| 31. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | ரூ. 70.00 |
| 32. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | ரூ. 30.00 |
| 33. | 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | ரூ. 20.00 |

**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

தொடர்புக்கு : 8148129887



தொடர் - 40

# எது முதலில்?

-இமாம். யூசுப் அல் கர்ளாவி

## நயவஞ்சகத்தில் எது பயங்கரமானது?

இறைமறுப்பின் மிக பயங்கரமான வகைகளுள் ஒன்று 'நிஃபாக்' எனும் நயவஞ்சகம்.

இது இஸ்லாத்தின் இருப்புக்கும் இஸ்லாமிய வாழ்வுக்கும் பேராபத்தை ஏற்படுத்தக் கூடியது.

ஏனென்றால் நயவஞ்சகன் முஸ்லிம் களுக்கு மத்தியிலேயே வாழ்பவன். முஸ்லிம் என்றே கருதப்படுபவன். தொழுவான். ஸகாத் எனும் கட்டாய தர்மம் வழங்குவான். இஸ்லாத்தின் அடையாளங்களுடனே யேயிருப்பான். முஸ்லிம்களைப் போலவே எல்லாம் செய்வான்.

ஆனால் அந்தரங்கத்திலோ முஸ்லிம் களின் எதிரியாக இருப்பான். முஸ்லிம்களுக்கு எதிராக சதிகள் செய்வான். சூழ்ச்சிகளில் ஈடுபடுவான். எதிரிகளுக்கு உதவிடுவான்.

இது எவ்வளவு பெரிய ஆபத்து!

எனவேதான் குர்ஆன் நயவஞ்சகர்கள் பற்றி நிறையப் பேசியிருக்கிறது. அவர்களின் கெட்ட குணங்களையும் தீய பண்புகளையும் திரையை விலக்கிக் காட்டியுள்ளது.

'அத்தவ்பா' என்ற ஒன்பதாவது அத்தியாயத்தின் மற்றொரு பெயர் "ஃபாளிஹா". இதன் பொருள் 'கேவலப் படுத்தக் கூடியது' என்பதாகும்.

இந்த அத்தியாயம் நயவஞ்சகர்களின் கெட்ட பண்புகளையும் அவர்கள் எப்படியெல்லாம் இருப்பார்கள் என்பதையும் 'பளிச்'சென்று சொல்கிறது. அதனால் இதற்கு அப்பெயர் வந்தது.

மேலும் அல்முனாஃபிகூன் நயவஞ்சகர் கள் என்ற பெயரில் ஓர் அத்தியாயமே திருக்குர்ஆனில் உண்டு.

மேலும் பல்வேறு அத்தியாயங்களிலும் இவர்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

அதுமட்டுமா? அல்பகரா என்ற இரண்டாம் அத்தியாயத்தின் ஆரம்பத்தில் இறையச்சம் உள்ளவர்கள் பற்றி மூன்று அல்லது நான்கு வசனங்களே பேசுகின்றன. இறை மறுப்பாளர்கள் பற்றி இரண்டே வசனங்கள்தான் உள்ளன.

ஆனால் நயவஞ்சகர்கள் பற்றியோ பதிமூன்று வசனங்கள் மிக விரிவாகப் பேசுகின்றன.

இவர்கள் மிக மோசமானவர்கள் என்பதால்தான் மறுமையில் நரகத்தின் அடித்தளத்தில் அல்லாஹ் இவர்களுக்கு இடம் ஒதுக்கியிருக்கிறான்.

அல்லாஹ் கூறுகிறான் : நிச்சயமாக இந்த நயவஞ்சகர்கள் நரகத்தின் மிகக் கீழான அடித்தளத்தில் இருப்பார்கள். அவர்களுக்கு (அங்கே) உதவக் கூடியவர் எவரையும் நீர் காணமாட்டீர்.

யார் மன்னிப்புக் கேட்டு, சீர்திருந்தி (தம் செயல்கள் வழியாக) அல்லாஹ்வை கெட்டி யாகப் பிடித்து தம் சன்மார்க்கத்தை அல்லாஹ் வுக்கென்றே அமைத்துக் கொண்டார்களோ அவர்களைத் தவிர இவர்கள் நம்பிக்கையாளர் களுடன் இருப்பார்கள். (4:145,146)

நாம் வாழும் இக்காலத்தில் முஸ்லிம் பெயரைத் தாங்கி வாழும் பலர் மதம் மாறிகளாகி விட்டதைக் காண முடிகிறது.

இவர்கள் இறைவனின் வழிகாட்டுதலுக்கு எவ்வித மரியாதையும் தருவதில்லை. எல்லாப் பிரச்சனைக்கும் தீர்வு 'ஷரீஅத்'தான் என்று ஏற்பதில்லை.

ஒவ்வொரு முஸ்லிமின் வாழ்வையும் வழியையும் சிந்தனையையும் ஷரீஅத் தான் தீர்மானிக்க வேண்டும் என்று கூறினால் இவர்கள் அதை பொருட்படுத்துவதில்லை.

இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும், இஸ்லாமியப் பிரச்சாரங்களையும் இவர்கள் இழிவாகவே பார்க்கிறார்கள்.

ஆம், இவர்கள் நயவஞ்சகர்கள். இஸ்லாத்தின் பெயரை சுமந்து வாழவே விரும்புகின்றனர். முஸ்லிம்களைப் போல பெயர் வைத்துக் கொண்டு முஸ்லிம்களின் பெயர் பட்டியலிலேயே தமது பெயரும் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

இவர்களெல்லாம் நபி(ஸல்) காலத்தில் வாழ்ந்த நயவஞ்சகர்களை விட மோசமான வர்கள். ஏனென்றால் அவர்களெல்லாம் சோம்பேறித்தனமாகவேனும் தொழுகைக்கு வந்தனர்.

ஆனால் இவர்களோ சுறுசுறுப் பாகவோ, மெத்தனமாகவோ தொழுகைக்கு வருவதேயில்லை.

அவர்கள் அல்லாஹ்வை மிகக் குறைவாகவே நினைவு கூர்ந்தனர். இவர்களோ அல்லாஹ்வை அதிகமாகவோ, குறைவாக வோ நினைவு கூர்வதேயில்லை.

அவர்கள் போரில் பங்கேற்றனர். முஸ்லிம்களின் அணியில் சேர்ந்து எதிரி களுடன் போரிட்டனர். இவர்களோ எதிரிகளுடன் இணைந்து முஸ்லிம்களிட மல்லவா மோதுகின்றனர்.

அவர்கள் முஸ்லிம்களோடு முஸ்லிம் களாக பள்ளி வாசல்களில் காணப்பட்டனர். இவர்களோ இறை மறுப்பாளர்களுடன் சேர்ந்து கேளிக்கை அரங்குகளிலும், பாவம் நடக்கும் இடங்களிலும் தான் காணப் படுகின்றனர்.

இப்படிப்பட்ட இந்த நயவஞ்சகப் பாவிகள் "நாங்கள் இறைமறுப்பாளர்களாகி விட்டோம்" என்று வெளிப்படையாக சொல்லித் தொலைத்து விட்டால் நாம் அவர்களைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிடலாம். நிம்மதியாக இருக்கலாம். சொல்லியும் தொலைக்க மாட்டார்கள். மாறாக இப்படியே இருப்பார்கள்.

இதோ அல்லாஹ் கூறுகிறான்: "இவர்கள் அல்லாஹ்வையும் இறை நம்பிக்கை கொண்டோரையும் ஏமாற்றப் பார்க்கின்றனர். ஆனால் அவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்கள் (என்பதன்றி வேறில்லை). இதை அவர்கள் உணர்வதில்லை." (2:9)

## ஒரு விளக்கம்

இங்கே நாம் ஒரு முக்கிய விஷயத்தைத் தெரிந்திருக்க வேண்டும்.

குஃப்ர் - இறைமறுப்பு, ஷிர்க் - இணைவைப்பு, நிஃபாக் - நயவஞ்சகம் ஆகியவை பற்றி இதுவரை நாம் கூறி வந்த போது அதன் பல்வேறு வகைகளையும் கூறினோம்.

எனினும் இச்சொற்கள் பொதுவாகக் கூறப்படும் இடங்களில் அது அதன் பூர்வீகப் பொருளிலேயே பார்க்கப்படும்.

அதாவது குஃப்ர் ஷிர்க், நிஃபாக், ஆகிய சொற்கள் பொதுவாகக் கூறப்பட்டால் அதற்கு இறைமறுப்பு, இணை வைப்பு, நயவஞ்சகம் என்றே அர்த்தம்.

அதே நேரத்தில் இறைவேதத்திலும் நபி மொழியிலும் சில பாவங்களைச் செய்வதர் குறிப்பாக பெரும்பாவங்களைச் செய்தவர் காஃபிராகிவிட்டார், இணைவைத்துவிட்டார், நயவஞ்சகராகி விட்டார் எனும் வாசகங்கள் காணப்படுகின்றன.

இதற்கெல்லாம் நேரடிப் பொருள் தந்தால் காரியம் கெட்டுவிடும். பெரும் குழப்பங்கள் ஏற்படும்.

(குஃப்ர், ஷிர்க், நிஃபாக் ஆகியவை இரு வகை உண்டு. சிறியவை, பெரியவை என்ற இருவகையில் இவர்கள் சிறிய குஃப்ர், சிறிய ஷிர்க், சிறிய நிஃபாக் இன் கீழ் வருவர். முன்னர் இது பற்றி கர்ளாவீ விபரமாகக் கூறியுள்ளார்.)

அந்தப் பாவங்களைச் செய்வதர் (குஃப்ர், ஷிர்க், நிஃபாக் ஆகிய ஏதேனுமொரு வழியில்) இஸ்லாத்தை விட்டே வெளியேறி விட்டார் என்று தவறாக எண்ணக் கூடாது. அவர் முஸ்லிம் தான். அவர் நம்முடைய எதிரணிக்குப் போய் விடவில்லை. அவருக்கு எதிராகப் போராட வேண்டும் என்பதும் இல்லை.

மாறாக அவர் நம்மவரே. அவர் பெரும் பாவமே செய்திருந்தாலும் கூட அவர் முஸ்லிம் தான். பெரும் பாவம் செய்து விட்டதாலேயே அவர் இஸ்லாத்தை விட்டு வெளியேறியவராக ஆகி விடமாட்டார்.

“உன் மூக்கு அறுபட்டாலும் கூட அது உன்னிடம் தானே உள்ளது” என்றொரு அரபுப் பழமொழி உண்டு. அது போல இவர் பாவிதான் என்றாலும் கூட முஸ்லிம்தான்.

**தமிழ்வடிவம் : இல்யாஸ் ரியாஜி**


# இப்போது பரபரப்பான விற்பனையில் படித்து விட்டீர்களா!




**அ. மார்க்ஸ் அவர்களின்**

**டி.எம். உமர் பாரூக்**

**ஒரு தலித் போராளியின் வாழ்வும் அவர் காட்டிய வழியும்**

**விலை : ரூ. 20.00**

வெளியீடு :

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்புக்கு : 8148129887

# தரீக்குல் குர்ஆன்

## இல்யாஸ் ரியாஜி



**அத்தியாயம் : அல்பகரா**

**வசனம் : 124**

***இப்ராஹீமை அவரின் இறைவன் சில கட்டளைகளைக் கொண்டு சோதித்தான். அவர் அவைகளை முழுமையாக நிறைவேற்றினார்.***

***"நிச்சயமாக நான் உம்மை மக்களுக்கு வழிகாட்டியாக்குகிறேன்" என்று (அவரிடம் இறைவன்) கூறினான். அவர் "என் சந்ததிகளிலும்" (வழிகாட்டியை ஏற்படுத்து) என்றார். அதற்கு (இறைவன்) என் வாக்குறுதி அநியாயக்காரர்களுக்கு கிடையாது என்றான்.***

**விரிவுரை**

எல்லாம் வல்ல ஏக இறைவன் இடுகின்ற கட்டளைகளை ஏன் எதற்கு என்று கேள்வி கேட்காமல் செயல்படுத்துகின்றவர்களே உண்மையான அடியார்கள். உண்மையான முஸ்லிம்கள்.

அப்படிப்பட்ட முஸ்லிம்களில் முதன்மையானவர் இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்கள். "நான் முதன்மை முஸ்லிம்" (6:163) என்று தன்னை அவர்கள் பிரகனம் செய்துகொண்டார்கள்.

இறைவனின் கட்டளைகள் அனைத்தையும் அரைகுறையாக அல்லாமல் முழு மனதுடனும் முழுமையாகவும் நிறைவேற்றினார்கள்.

அதனால் அவர்களை அல்லாஹ் மனிதர்களுக்கு வழிகாட்டும் தலைவராக்கினான்.

இந்த வசனம் ஒரு பெரிய உண்மையை 'பளிச்'சென்று சொல்கிறது. அதாவது, "இறைவனின் கட்டளைகளை ஏற்று நடப்பவர்களே மக்களை வழி நடத்தும் தலைவர்களாக முடியும் அது ஒரு சமுதாயமானாலும் சரி. தனி மனிதரானாலும் சரி" என்பதே.

தலைமைக்கு வந்த பிறகு அநீதி இழைத்தால் அவர்களிடமிருந்து தலைமை பறிக்கப்படும். இதற்கு இஸ்ரவேலர்களின் வரலாறே சாட்சி.

ஷஹீது ஸய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார். இதுவரை இந்த அல்பகரா

அத்தியாயத்தில் உள்ள வசனங்கள் வேதக்காரர்கள் பற்றிக் கூறின.

இனிவரும் வசனங்கள் அதற்கு சற்று முன்னே சென்று இபுறாஹீம் நபி பற்றிய செய்திகளைக் கூறுகின்றது.

யூதர்கள் தம்மை இப்றாஹீம் நபியின் வாரிசுகள் என்று கூறி பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். அல்லாஹ் இப்றாஹீம் நபியின் வாரிசுகளுக்கு வழங்குவதாக வாக்குறுதி அளித்துள்ள வளர்ச்சி பாக்கியம் இவற்றுகெல்லாம் நாங்களே உரிமை யாளர்கள் என்கின்றனர். எங்கள் வழியே நேர்வழி. எமது மார்க்க நிலைபாடுதான் மெய்யானது. நாங்கள் எப்படி வாழ்ந்தாலும் சொர்க்கம் எங்களுக்கே என்று கூறிவந்தனர்.

இதற்குக் காரணம் நாங்கள் இப்றாஹீம் நபியின் மகன் இஸ்ஹாக் நபியின் வாரிசுகள் என்றனர். இதே போல (மக்காவில் வாழ்ந்த) குறைஷிக் குலத்தினரும் இப்றாஹீம் நபியின் மகன் இஸ்மாயீல் நபியின் வாரிசுகள்தான்.

இதை குறைஷிகள் பெருமிதத்துடன் கூறுவார்கள். இறைவனை வணங்குவதற்காக பூமியில் எழுப்பப்பட்ட முதல் பள்ளி வாசலான கஅபா தங்களின் பொறுப்பின் கீழ் இருப்பதும் அதனை அவர்கள் நிர்வாகம் செய்வதும் அரபு மக்களுக்கு மதரீதியிலான வழிகாட்டியாக இருப்பதும் தங்களின் பெருமை என அவர்கள் கருதினர்.

இந்நிலையில் பின் வரும் வசனங்கள் இப்றாஹீம் நபியின் உண்மையான வாரிசுகள் யார்? யூதர்களா? கிறிஸ்தவர்களா? இணை வைப்பவர்களா?

என்ற கேள்விக்கான விடையாகவும்,

முஸ்லிம்கள் முன்னோக்க வேண்டிய கிப்லாவைக் காட்டுவதாகவும்,

இப்றாஹீம் நபியின் வழிமுறை எது (அது தெள்ளத் தெளிவான ஏகத்துவமே) என்பதைச் சொல்வதாகவும்,

வேதக்காரர்களும் இணைவைப்பவர் களும், எப்படி இந்த சன்மார்க்கத்தைச் சிதைத்தார்கள் என்று சொல்வதாகவும்,

இப்றாஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக் யஅகூப் ஆகிய இறைத்தூதர்களின் மார்க்கங் களுக்கு இடையேயான நெருக்கத்தைப் பறைசாற்றுவதாகவும்,

கொள்ளை கோட்பாடு என்பதெல்லாம் இறைத்தூதர்கள் பிரகடனம் செய்வது தானேயன்றி அது ஒரு சமுதாயமோ ஒரு குழுவோ பிரகடனம் செய்வது அல்ல என்பதை முழங்குவதாகவும்

இப்றாஹீம் நபியின் வாரிசுகள் என்போர் ரத்த வழி உறவு வழி வாரிசுகளல்ல. கொள்கை, கோட்பாடு, நம்பிக்கை ஆகிய வழியின் வாரிசுகளே என்பதைத் தெளிவுபடுத்துவதாகவும் பின் வரும் வசனங்கள் அமைந்துள்ளன.

இதையெல்லாம் சொல்லும் போது இதனுடன் தொடர்புடையவற்றையும் கூறுகின்றன.

இப்றாஹீம் நபி, இஸ்மாயீல் நபி, இஸ்ஹாக் நபி பற்றியும் புனிதப்பள்ளிவாசல், அதுகட்டப்பட்ட தகவல், அதன் நிர்வாகம், அதன் சின்னங்கள் ஆகியவை கொள்கையுடன் தொடர்புடையவை என்பதால் வற்றையும் கூறுகின்றன.

**(நூல்: பீழிலாலில் குர்ஆன்)**

## அந்தக் கட்டளைகள்

இப்றாஹீம் நபியை அல்லாஹ் எந்தக் கட்டளைகளைக் கொண்டு சோதித்தான் என்பதற்கு பின் வரும் விளக்கங்கள் கூறப் படுகின்றன.

முப்பது வகையான மார்க்கப் பண்பு களை இது குறிக்கிறது.

‘அத்தவ்பா’ என்ற ஒன்பதாவது அத்தியாயத்தின் நூற்றுப் பனிரெண்டாவது வசனத்தில் கூறப்பட்டுள்ள பத்து பண்புகள்.

‘அஹ்ஸாப்’ என்ற முப்பத்து மூன்றாவது அத்தியாயத்தின் முப்பத்து ஐந்தாவது வசனத்தில் கூறப்பட்டுள்ள பத்து பண்புகள்.

*அல் முஃமினூன் என்ற இருபத்து மூன்றாவது அத்தியாயத்தின் ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ள பத்து பண்புகள்.*

*இவைதான் இப்றாஹீம் நபியைச் சோதிக்க அல்லாஹ் முன்வைத்த கட்டளைகள் என்றும் கூறப்படுகின்றது.*

**(நூல் : குர்த்துபீ)**

*பத்து சுத்தங்களைக் கடைப்பிடிக்கும் படி அல்லாஹ் இப்றாஹீம் நபிக்குக் கட்டளையிட்டான். ஐந்து தலையில், ஐந்து உடலில். இதோ அவை:*

*மீசை கத்தரித்தல், வாய் கொப்பளித்தல், மூக்கை சுத்தம் செய்தல், பல் துலக்குதல், தலை வாரிச் சீவுதல், (உடலில்) நகம் வெட்டுதல், மறைவிடத்தின் ரோமங்களை சிரைத்தல், கத்னா எனும் விருத்த சேதனம் செய்தல், அக்குள் ரோமம் அகற்றுதல், மல ஜலம் கழித்த பின் தண்ணீரால் சுத்தம் செய்தல்.*

**(நூல்: தஃப்சீர்தபரீயை மேற்கோள்காட்டி குர்த்துபீ)**

*ஸயீத்பின் அல் முஸய்யப் (ரஹ்) கூறினார்கள்: இப்றாஹீம் நபியவர்கள்தான் முதன் முதலில் விருந்தினரை உபசரித்தவர். முதன் முதலில் மறைவிடத்து ரோமங்களை சிரைத்துக் கொண்டவர். முதன் முதலில் தம் நகங்களை வெட்டிக் கொண்டவர். முதன் முதலில் மீசையை கத்தரித்தவர்.*

*முதன் முதலில் நரைத்ததும் அவருக்குத்தான். உடனே அவர் இறைவனிடம் "இது என்ன?" என்று கேட்டார். அதற்கு "இது (வெள்ளை முடி) கம்பீரமாகும்" என்றான் இறைவன். அதற்கவர் "எனக்கு கம்பீரத்தை அதிகமாக்கு" என்றார்.*

**(நூல் : முவத்தா இமாம் மாலிக், குர்த்துபீ)**

*ஆக இறைத்தூதர் இப்றாஹீம் நபியவர்கள் மனிதனின் அடிப்படை நாகரீகத்தின் தந்தை.*

*ஆம் மேற்காணும் பண்புகள் ஏதுமற்ற மனிதன் மிருகத்தைப் போலல்லவா தோன்றுவான். எனவே அவர்கள் மனித குலத்தின் இரண்டாம் தந்தை என்றும் அழைக்கப்படுகிறார்கள். எல்லோரும் உரிமை கொண்டாடும் மாமனிதராகவும் விளங்கு கின்றார்கள்.*

**தொடரும்**

தொடர். . .

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?



# மேற்கத்திய நாகரீ கத்தின் இயல்பும் அதன் வரலாறும்

**- அபுல் ஹசன் அலீ நத்வீ**

**மொழிபெயர்ப்பு: அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ**

உலகத் தலைமை, இஸ்லாமிய சமூகத்திலிருந்து ஐரோப்பிய சமூகத்திற்குச் சென்ற காரணத்தைப் பற்றி அறிவதற்கு முன்னால்,

அவை உலக மனப் போக்கில், சமூக குணாதியங்களில் சமூக நாகரீகப் பண் பாட்டில் மனிதனின் சிந்தனைப் போக்கில், அவனின் சுபாவத்தில் என்ன மாறுதலை ஏற்படுத்திவிட்டன என்பதை அறிவதற்கு முன்னால்,

இந்தத் தலைமைத்துவ மாற்றத்தால் உலகம் இழந்ததை விட கிடைத்த பலாபலன்கள் அதிகமா? அல்லது பலன்களை விட சோதனைகள் தான் அதிகமா? என்பதை அறிவதற்கு முன்னால்,

மேற்கத்திய நாகரீகத்தின் இயற்கையைப் பற்றியும், அதன் அமைப்பு உருவத்தைப் பற்றியும் அதன் ஜீவன் பற்றியும் இந்த சமூகத்தின் வாழ்க்கைத் தத்துவம் பற்றியும், அது எவ்வாறு உருவானது என்பது பற்றியும் அறிவது கடமை.

இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மேற்கத்திய கலாச்சாரம், அதிகமான எழுத்தாளர்கள் எண்ணுவது போன்று, ஐரோப்பாவின் இருண்ட காலமாகக் கருதப்பட்ட காலத்திலிருந்தோ, அல்லது புதிதாக வந்ததோ அல்ல. அந்த எண்ணம் தவறு.

அதனுடைய வரலாறு பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் போய்ச் சேருகிறது. கிரேக்க மற்றும் ரோமானியக் கலாச்சாரத் திலிருந்து, வழி வழியாக வந்த பரம்பரைக் கலாச்சாரமாகும்.

அந்த இரண்டு நாகரீகத்தின் அரசியல் கலாச்சார மனப்போக்கிலிருந்து உருவான தாகும்.

அந்த இரண்டு நாகரீகங்கள் விட்டுச் சென்ற சொத்தாகவும், அரசியல் அமைப்

பாகவும் சமூகத் தத்துவமாகவும் வந்தேறி யுள்ளது இது.

அந்த இரண்டு கலாச்சாரத்தின் சிறப்பம்சங்கள், இயற்கைக் குணங்கள் மனோபாவங்கள் இதில் பிரதிபலிப்ப தோடல்லாமல் அதன் இரத்தமாகவும், சதையாகவும் உருவெடுத்துள்ளது.

ஐரோப்பிய மனோபாவத்திற்கு, கிரேக்க நாகரீகமே முதலாவதாகத் தோன்றும் வசீகரத் தோற்றம். ஐரோப்பிய தத்துவத்தின் அடிப் படையே, அந்தக் கிரேக்க நாகரீகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

இதிலிருந்தே ஐரோப்பாவின் மனோ பாவமும், இயற்கைச் சுபாவமும் தெளிவாகத் தெரிகிறது. இதைத்தான் வரலாறும் பதிவு செய்துள்ளது. அதன் அழிந்து போன மிச்ச மீதிகளிலிருந்து எழுப்பப்பட்ட கம்பீர கட்டடம்தான் ரோம நாகரீகம்.

அதுவே ஐரோப்பா நாகரீகத்தின் ஜீவினைச் சுமந்துள்ளது. பல நூற்றாண்டு களாக ஐரோப்பிய மக்கள் அதன் சுபாவங் களையும், சிறப்பம்சங்களையும் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர்.

சிந்தனைகள், ஞானங்கள், இலக்கியங்கள், தத்துவங்கள் என எல்லாவற்றிற்கும் இவற்றையே அனந்தரச் சொத்தாக்கி விட்டனர்.

இதுதான் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வசீகரமான தோற்றத்தில் வெளிப்பட்டது.

அதன் கவர்ச்சிகரமான ஆடை அழகு, புதிதாகத்தான் தோன்றியதோ என்ற மாயையை நமக்கு ஏற்படுத்தினாலும் அந்த ஆடையின் ஊடு நூலும், பாவு நூலும் கிரேக்கத் தத்துவமாகவும், ரோமானிய நாகரீகத்தை விளங்கி, அதன் சுபாவங்களையும் அவற்றின் ஜீவனையும் நன்றாக விளங்கினால் தான் இருபதாம் நூற்றாண்டில் தோன்றி இருக்கும் மேற்கத்திய நாகரீகத்தை நன்றாக திறனாய்வு செய்து அதன் மீது தீர்ப்பளிப்பது வசதியாயிருக்கும்.

## கிரேக்க நாகரீகத்தின் சிறப்பம்சங்கள்

கிரேக்க சமுதாயம், உலக சமுதாயங் களில் தலை சிறந்த சமுதாயம், அற்புதமான சமுதாயம்.

அறிவிலும், ஞானத்திலும், இலக்கியத்திலும் அற்புதமான சமுதாயம். அறிவிலும், இலக்கியத்திலும் பொலிவுடன் மிளிரக்கூடியவர்கள் நிறைந்த மிகுந்த புத்திசாலிகளாலும் சாமார்த்தியக் காரர்களாலும் வளம் பெற்ற சமூகம்.

தத்துவத்தில், இலக்கியத்தில் சரித்திரம் படைத்தவர்கள், அங்கு தோன்றிய தத்துவ ஞானிகள் அறிவு ஜீவிகள், முத்திரை பதித்த அறிஞர்கள், விட்டுச் சென்ற அரிச்சுவடிகளே உலக நூலகத்தை வளம் பெறச் செய்திருந்தன.

இந்த இடத்தில் அவர்கள் கட்டி எழுப்பிய நாகரீகத்தை அறிய வேண்டும். அந்நாகரீகத்தோடு சேர்ந்திருக்கக் கூடிய வெளி அலங்காரங்கள், பகட்டுகள் போன்றவற்றை நீக்கி விட்டு திறனாய்வு செய்ய முற்படுவோமேயானால் அந்நாகரீகத்தின் சிறப்பம்சங்களையும், இயற்கைச் சுபாவங் களையும் ஆய்வு செய்வோமேயானால் கிழக்கத்திய நாடுகள் பெற்றிருககாத சில சிறப்புகள் அதற்கு இருப்பதை நாம் அறியலாம்.

1. ஐம்புலன்களால் அறிய முடிவதை நம்புவது. ஐம்புலன்களால் அறிய முடியாதவற்றை ஏற்பது அரிது.

2. மார்க்கமும், மார்க்கப்பற்றும் குறைவு.

3. இவ்வுலக வாழ்க்கைக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பது. இவ்வுலக வாழ்க்கையின் இன்பத்திற்கும் அதன் நன்மைகளை பெறுவதற்கும் மிக அதிகம் அதிகம் கவனம் எடுத்தல்.

4. நாட்டுப் பற்று இனவெறி.

பல்வேறு வார்த்தைகளால் கூறப்பட்டிருக்கும் இந்த நான்கையும் “உலகாதயம்” என்ற ஒரே வார்த்தைக்குள் மூடிவிடலாம். கிரேக்க நாகரீகத்தின்

அடையாளமே, இந்த உலகாதயமேயாகும். கிரேக்கர்களில் இணைந்து விட்ட கலாச் சாரம், கல்வி, தத்துவம், கவிதை, மார்க்கம் என எல்லாமே அந்த உலகாதயத்திலிருந்து தான் வெளிப்படுத்த முடிந்தது.

இறைவனின் பண்புகளை விவரிக்க பல சிலைகளை செதுக்கினர். அதற்காக கோவில்களையும் வணக்கத் தலங்களையும் உருவாக்கினார்கள்.

உணவளிக்க ஓர் தெய்வம், கிருபைகளை கொடுக்க ஒரு தெய்வம், அடக்கி ஆளும் சக்தியைக் காட்ட ஓர் தெய்வம். இவ்வாறு ஓர் உடலமைப்புக்குச் சொந்தமான பண்புகளை இறைப் பண்புகளோடு இணைத்தார்கள்.

அதற்காக கட்டுக்கதைகளையும், சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் ஏற்படுத்தினார்கள். உருவமற்ற கருத்துக் களுக்கு உருவம் தந்தார்கள். பாசத்துக்கு ஓர் தெய்வம், அழகுக்கு ஓர் தெய்வம் எனப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

அரிஸ்டாட்டிலின் தத்துவங்களில் வரக்கூடிய பத்து அறிவு மூலங்கள், ஒன்பது வான் வரி படலம் போன்றவை உலகாதயத் திலிருந்து கசிந்து பரவியதுதான். இந்த உலகாதயத்திலிருந்து கிரேக்கர்கள் விலகி இருக்கவே முடியவில்லை.

கிரேக்க நாகரீகத்தில் உலகாதயம் மிகைந்திருப்பதை ஐரோப்பிய அறிஞர்கள் ஒப்புக் கொள்கின்றனர். தங்களுடைய புத்தகங்களிலும், ஆய்வுகளிலும் அவற்றைப் புகழ்ந்து கூறியுள்ளனர்.

ஜெர்மானிய அறிஞர், டாக்டர் Hass, ஜெனிவாவில் மூன்று பேருரைகள் ஆற்றி னார்கள். ஐரோப்பியர்களின் நாகரீகம் எது என்பதே அவருடைய உரையின் தலைப்பு.

இவர் மேற்கத்திய நாகரீகம், கிழக்கத்திய நாகரீகத்திலிருந்து எவ்வித பலனும் பெற்றதில்லை என்ற கருத்து உடையவர்களில் ஒருவர்.

**தொடரும்**

Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.